சிலம்பு ௩௪	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௧, சித்திரை மே, 1960	பரல் ௯

பல்கலைக் கழகம் கற்பிக்கும் மொழியும் தமிழே

பல்கலைக் கழகம் கற்பிக்கும்போதனை மொழியும் தமிழ்மொழியாகவே இருத்தல் வேண்டும் என்னும் மெய்ம்மையினைப் பல எடுத்துக்காட்டுக்களுடன் நம் செல்வியில் முன்பும் எழுதியுள்ளோம். இன்றியமையாமை கண்டு இப்பொழுதும் எழுதுகின்றோம். ஒவ்வொருவருந் தத்தம் தாய்மொழி உயர்தல்வேண்டும் அதன் பொருட்டு உழைத்தல் வேண்டும் என்னும் உண்மை நோக்குடையராயிருப்பதியல்பே. அந்நோக்கம் எளிதிற் கைகூட அம் மொழி வளஞ்சால் மொழியாக வளர்ந்து திகழ்தல்வேண்டும். வள நிறை வில்லாவிடின் அம் மொழியாளர்கள் வளம்படுத்தும் அரிய பெரிய முயற்சியினை முதற்கண் மேற்கொண்டு முற்றுவித்தல் வேண்டும். அத்தகைய நிலையினும் அம்மொழிவல்ல பேரறிஞர்கள் உண்மை ஆர்வத்தால் அப் பணியினையும் செய்து கற்பிக்கும் மொழியாக்குகின்றனர். மேலும் அம் மொழிகளுட் பல அண்மைக் காலத்துத் தோன்றியனவும், வளம்பெறத் துவங்கியனவுமாகும்.

தமிழின் தொன்மை

தமிழின் தொன்மையினை நன்கு துருவி ஆய்ந்து வரையறுத்து நடுநிலை திறம்பாது உண்மையுணர்த்திய பேரறிஞர் டாக்டர் கால்டுவெல் முதலிய மேற்புல அறிஞர்களாவர். அவர்கள் கருத்து இப்பொழுது உலகிடை வழங்கும் மிகப் பெரும் பழைய மொழிகள் சிலவற்றுள்ளும் மிகமிக முந்திய மொழி தமிழ்மொழியென்பதே.

இவ்வுண்மையினை நம் இந்தியக் குடியரசுத் தலைவர் இராசேந்திரப் பிரசாதின் மெய்ம்மைப் பொன்மொழியும் வலியுறுத்தும் அது வருமாறு:

ஏப்பிரல் உக ஆம் நாள் புதுதில்லியிலுள்ள 'தென்னிந்திய நாடகவரங்கத்தார்' தங்களுடைய கட்டிடப்பொருளின் பொருட்டு நான்கு நாடகங்கள் நடிக்க ஏற்பாடு செய்துள்ளனர். இவ் விழாவினைத் துவக்கி வைத்தபோது 'தமிழ் நாடக அரங்கு, மிகவுயர்ந்த தலைமுறை வழியினைச் சார்ந்தது என்பது எனக்கு நன்கு தெரியும். இந்தியாவில் பேசப்படும் மொழிகளில் தமிழ்மொழி மிகவுந் தொன்மை வாய்ந்தது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியுள்ள இலக்கியத் தொன்மை வழக்கமைந்தது. மிக்க சிறப்புடையது. தமிழ் மக்களின் கலைத்திறனும், படைப்பு வல்ல கற்பனை ஆற்றலும் இணைந்து நாடகக் கால்வழியினை உருவாக்கியிருப்பது வியப்பினையூட்டும் செய்தியாகாது' என்பதே.

அமைக்கு முயற்சி

தொன்று தொட்டு இருவகை வழக்கினும் நின்று நிலவி வழங்கிவரும் நம் தாய்மொழி குறைவிலா இலக்கண இலக்கிய வளம் நிரம்பியது. தனித்தியங்கும் ஆற்றல் வாய்ந்தது; சொல்லாக்குந் திறல்மிக்கது; இஃது இத்துணைக்காலமும் ஆட்சி மொழியாகத் திகழ்ந்திருந்தால் ஆங்கிலத்தின் மிக்க புகழினை அடைந்திருக்குமென்பதுறுதி. நற்காலமாக இப்பொழுது மாநில ஆட்சிமொழியாகவும், பல்கலைக் கழகக் கற்பிக்கும் மொழியாகவும் முறையே வந்தும் வரக்கூடிய நிலையிலுமிருக்கின்றது. சில பேரறிஞர்கள்முன் உயர்நிலைப் பள்ளியில் ஆங்கிலத்தை மாற்றித் தமிழைக் கற்பிக்கும் மொழியாக அமைக்க முயன்ற காலத்தும் ஆங்கிலத்தின் தரங்குறைந்துவிடும், பாடப்புத்தகங்கள் இல்லை, கற்பிக்கும் ஆற்றல் வாய்ந்த ஆசிரியர்களில்லை எனத் தடை நிகழ்த்தினர்.

அதுபோலவே இப்பொழுதும் தடை நிகழ்த்துகின்றனர். எங்ஙனம் உயர்நிலைப்பள்ளியில் மிகவும் கற்பிக்கும் முறைகள் செவ்வையுற நடக்கின்றனவோ அதுபோல் பல்கலைக் கழகத்திலும் கற்பிக்கும் முறைகள் நாளடைவில் செவ்வையுற நடைபெறுமென்பதனை உன்னித்தல்வேண்டும். அந்நோக்கத்துடன் தங்கள் காலத்திலேயே தமிழ் கற்பிக்கும்மொழியாக இடம்பெற்றதென்னும் பெருமையும் புகழும் பெற முயலுவதே நன்மைப் பாலதாகும். எச்செயலுக்கும் மாற்றமாகத் தொடங்குங்கால் சிறு சிறு இடர்ப்பாடுகளும், பெருமலைவும், கடும் எதிர்ப்பும் உண்டாவன இயல்பே. அவற்றை அரும்பெருமுயற்சியால் அகற்றுவதே அருங்கடனாகும். அங்ஙனமின்றி அஞ்சி யகல்வது ஆண்மைச் செயலாகாதென்ப.

இப்பொழுது கல்லூரிப் பாடங்களுக்கு அமைக்கும் பாட நூல்கள் சிறு சிறு குறைபாடுகளைக் கொண்டிருப்பினும் நாளடைவில் அக் குறைபாடுகள் முற்றும் அகற்றப்பட்டுவிடும் என்பது துணிபு. மேலும் இப்பொழுது கற்பிக்கும் ஆசிரியர்களும் கற்பிக்கக் கற்பிக்க விளக்கம் பெறுவர்; கற்பிக்குந்திறனும் வாய்க்கப் பெறுவர். கற்கின்ற மாணவர்களும் கலை நலம் நிரம்பிச் சிந்தனைத் திறங்களனைத்தும் தாய்மொழியிலேயே எண்ணும் தனிப்பெரு வாய்ப்பினை எய்துவர். அவர்கள் நூலாசிரியராகவும், கற்பிக்கும் பேராசிரியராகவுந் திகழுங்காலத்து மிகச் செம்மையான நூல்களும், கற்பிக்கும் முறையும் தாமே தோன்றிவிடும்.

இதுகாறுங் கற்பிப்போரும் கற்போரும் ஆங்கில மொழி வாயிலாகவே சிந்தனையினை வளர்த்து வந்திருக்கின்றனர். அதைத் தாய்மொழி வாயிலாக வெளிப்படுத்தும்போது விரைவாகவும் தெளிவாகவும் எழுதவோ இசைக்கவோ இயலாதவராகின்றனர். காரணம் வேற்றுமொழி வாயிலாகக் கற்றமையே யாகும் இப்பொழுது தாய்மொழி வாயிலாகக் கற்பிப்பதும் கற்பதும் ஆகிய நிலைமை அமைந்தமையால் இனி அத்தகைய இடர்ப்பாடுகள் உண்டாகா. சிந்தனையின் ஊற்று எம்மொழியோ அம்மொழியே வளர்ச்சி யெய்தும். அச்சிந்தனையாளரும் அம்மொழியின் ஆக்கத்தினையே நாடுவர். நாளடைவில் அவரும் அம்மொழியாளரேயாவர். இங்ஙிலையினுற்றான் இப்பொழுது தமிழ் வளர்ச்சியுறுது தளர்ச்சியுற்றுத் தோன்றுகிறது. அத் தளர்ச்சியினை நீக்கி வளர்ச்சியுறச் செய்யப் பல பேரறிஞர்கள் முன்வந்துள்ள இந்த நற்போழ்தில் தக்க நூல்களில்லை, தக்காரில்லை என்று அறிஞர்கள் சிலர் அறைகின்றனர். நூல்களும் தக்காரும் வேற்று நாட்டிலிருந்து வந்திறங்கவேண்டிய விலைப்பொருள்களன்று. அவை இந் நாட்டறிஞர்களாலேயே ஆக்கவேண்டிய அரும்பொருள்கள். எங்ஙனமாயினும் அவர்களே தாம் நூலாக்கித் தருதல்வேண்டும். அத்தகைய முயற்சியினை இன்றே தொடங்குவது நன்றல்லவா? தொடங்க வேண்டிய இன்றியமையாமையும் வந்துவிட்டது. இன்னுங் காலத்தைப் பின் தள்ளிப்போடுவோமானால் தாய்மொழியாந் தமிழ்மொழியின் முதன்மையிடத்தை அயன் மொழி எடுத்துக் கொள்ளுதல் கூடும். அதன்பின் தமிழ்மொழி சிறந்து வருவதற்கே வாய்ப்பும் இடமும் வருவதற்கின்று; என்னை? 1964-5 இல் மத்திய ஆட்சிமொழி கண்டிப்பாக இந்தி வந்துவிட வேண்டுமென்று எல்லாரும் முயலுகின்றன ரென்பதனுலென்க. ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் சப்பானிலும் துவக்கக் காலத்தில் இத்தகைய இடர்ப்பாடுகள் இருந்தன. அவை பின் அகன்று இப்பொழுது முன்னேறியுள்ளமை வரலாறு கண்ட உலகறியுண்மை.

வட்டார மொழிகளில் வழங்குவன

இந்நாளில் எட்டுக்கு மேற்பட்ட மாநிலங்களில் பல்கலைக் கழகம் கற்பிக்குமொழி அவ்வம் மாநில வட்டார மொழிகளாக அமைந்துள்ளமை ஏனை மாநிலத்தார்க்குப் பெருந் தூண்டுதலாகும். இம் மொழிகளுக்கெல்லாம் நெடுங்காலத்துக்கு முன் தோன்றிக் குறைபாடில்லா நிறை வளர்ச்சியுடன் திகழும் தமிழ்மொழிக்கண் அம்முறை இன்னும் வரத் தயங்குவதென்பது எங்ஙனம் பொருந்தும்? ஏற்கெனவே எட்டு வட்டார மொழிகள் பல்கலைக் கழகம் கற்பிக்கு மொழியாகிவிட்டமையை இந்தியப் பேரரசின் கல்வியமைச்சர் ஸ்ரீமாலி அவர்கள் தில்லி மக்கள் மன்றத்தில் கூறியுள்ளார். மேலும் இம் முறையைப் பின்பற்றப் பதினன்கு பல்கலைக் கழகங்கள் இசைந்துள்ளனவாகவும் அறிவித்துள்ளார்.

வட்டார மொழிகளில் பல்கலைக் கழகப் படிப்பினை எய்திய மாணவர் அயல் மாநிலங்களுக்குப் போனல் வேலை கிடைக்குமா எனச் சிலர் எண்ணுகின்றனர். அவ்வம் மாநில மொழியே ஆட்சி மொழியாக இருக்கும்போது எந்த மாநிலத்தாரும் அயல் மாநில அலுவல்களை நினைப்பதற்கு இடமின்றென்க. ஆங்கில மொழியின் தொடர்பிருப்பதால் வெளிநாடு செல்வார்க்கு இடையூறுண்டாகுமோ என எண்ணும் ஐயத்திற்கும் வழியில்லை. ஆதலால் பல்கலைக் கழகம் கற்பிக்கு மொழியாகத் தமிழ் அமைய வேண்டுவது இன்றியமையாததும் சாலப் பொருத்தமுடையதும் ஆகும். மேலும் ஆட்சிமொழி தமிழாக அமைந்திருக்கும்போது அதனுக்கத்திற்குத் துணையாகப் பல்கலைக் கழகக் கற்பிக்கு மொழியும் தமிழ்மொழியிலமைவதே ஏற்புடையதாகும். இத்தகைய முயற்சியில் ஈடுபட்டுள்ள பேரறிஞர்களைப் பெரிதும் போற்றுகின்றோம். சிறப்பாகக் கல்வியமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்களை மிகுதியும் போற்றுகின்றோம். அவர்கள் 'அறிந்தாற்றிச் செய்கிற்கும் ஆற்றல் மிக்கவர்.' அதனல் அவர்கள் புகழும் போற்றல் மிக்க பொன்ருப் புகழாக மிளிர்கின்றது.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் இலட்சுமணசாமி முதலியாரவர்களும் இவ்வரும் பெருஞ் செயலுக்கு விழுமிய முழுத் துணைவராய் நின்று தங்கள் காலத்தில் பல்கலைக் கழகக் கற்பிக்கும் மொழி தமிழ்மொழியாயமைந்த தென்னும் பெருமையினை எய்தி அழியாப் புகழெய்துவார்களென்பது துறுதி. அங்ஙனம் எய்துமாறு அவர்களை வேண்டிக்கொண்டு அவர்களையும் பாராட்டுகின்றோம். உறுதுணையாகும் நல்லறிஞர்களையும் பாராட்டுகின்றோம். வாழ்க தமிழ்மொழி! வாழ்க பல்கலைக் கழகம்!

இலக்கியத் திறனாய்வு

[திரு. ச. அகத்தியலிங்கம், M. A., B. Sc.]

உலகில் முதன் முதலாக மனிதன் வாழ்வதற்கேற்ற சூழ் நிலையைத் தென்னிந்தியா தான் அடைந்தது என்று சில நூல் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். நீலகிரிமலை வட்டாரத்தில் காணப்படும் பாறைகள் மிகவும் பழமைவாய்ந்தன என்பது அவர் களுடைய கொள்கையாகும். ஆகையால் தமிழன் மிகப்பெரும் பழங்குடியைச் சார்ந்தவன் என்பது தேற்றமாகும். இதே போன்று அவன் பேசும் மொழியாகிய தமிழும் பழமைவாய்ந்தது. இலக்கியவளமும் இலக்கண அரணும் பெற்றுத் திகழ்வது என்று எண்ணும்போது அவன் உயர்வு நன்கு புலப்படும். அவன் நாகரிகமும் பண்பாடும் உலகில் மற்று எவர் நாகரிகத்துக்கும் பண்பாட்டுக்கும் பிற்பட்டதன்று. சுமேரிய, எகிப்திய, சீன நாகரிகங்கட்கும் பழமையான பண்பட்ட நாகரிகம் என்று ஆராய்ச்சியால் காணும்போது, கண்டு பிறநாட்டு அறிஞர் பெரு மக்கள் வியக்கும்போது தமிழனாய்ப் பிறந்த எவனும் பெருமை கொள்ளாமல் இருக்கமுடியாது. இலக்கியம், இலக்கணம், நாக ரிகம், பண்பாடு என்றின்னோரன்ன துறைகளில் மிகப் பழங் காலந்தொட்டே முன்னேறியிருந்தது தமிழகம்.

ஆனால் சில துறைகளில் தமிழகம் முன்னேறாமலும் இருந் துள்ளது. வரலாறு இலக்கியத் திறனாய்வு போன்ற சில துறை களில் அதன் வளர்ச்சியை ஏனோ காணமுடியவில்லை. வளர்ச்சி யைக் காணமுடியவில்லையே ஒழிய இவைகளைத் தமிழர்கள் அறியா திருந்தார்கள் என்று எண்ணுவது பொருந்தாதாகும். பண்டைத் தமிழக வரலாற்றின் சில கூறுகளைச் சில இலக்கியங்களில் காண் கிறோம். பதிற்றுப்பத்தின் மூலம் சேரவரசர்களின் வரலாற்றை ஓரளவு தெரிந்துகொள்ளுகிறோம். புறநானூறு, அகநானூறு போன்ற இலக்கியங்களிலிருந்து தமிழக அரசியல் வாழ்வையும் தமிழ்மக்களின் அகவாழ்வையும் சிந்திக்கமுடிகிறது. தமிழகத்தின் பல்வேறு கோயில்களிலும் ஊர்களிலும் காணப்படும் கல்வெட்டுக் களாலும் செப்பேடுகளாலும் வரலாற்றுச் செய்திகள் சிலவற்றை அறிகிறோம். புதுக்கோட்டை, ஆதிச்சநல்லூர் போன்ற இடங் களில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் சரித்திரகாலத்துக்கு முற்பட்ட செய்திகளைத் தருகின்றன. ஆனால் வரலாறாக எழுந்த நூற்கள் எதுவும் பண்டைத் தமிழகத்தில் இருந்தனவென்று நினைக்கப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. வள்ளுவனையும் இளங்கோவையும் கம்பனையும் பெற்றுத்தந்து பெருமைகொண்ட தமிழகம் ஒரு

ஹெரடோட்டசையோ[1], தூசிடைட்சையோ[2] பெற்றுத்தரவில்லை. ஒரு லிவி[3]யையோ அன்றித் தேசிடசையோ[4] பெற்றுத்தந்திருந்தால் கூட தமிழகத்தின் தெளிவான வரலாறு என்றோ எழுதப்பட்டிருக்கும். அன்னியர்கள் ஆராய்ந்து, அவரவர் மனநிலைக்கேற்பத் திரித்தும் கூட்டியும் குறைத்தும் எழுதுகின்ற அவல நிலைமை ஏற்பட்டிராது.

இதே நிலைமையைத்தான் இலக்கியத் திறனாய்விலும் காண்கிறோம். உலகில் எந்த மொழியிலக்கியத்துக்கும் குறைவுபடாத இலக்கியச்செல்வத்தைப் பெற்றிருக்கிறோம். ஆனால் இலக்கியத் திறனாய்வு நூற்களைத் தமிழில் காண்பது மிக அரிதாகும். சிறந்த இலக்கியங்களின் உரைகள் பலவற்றைக் காண்கிறோம். ஓர் உரையை மறுத்து மற்றோர் உரை தோன்றியிருப்பதையும் பார்க்கிறோம். அவ் வுரைகள் மூல இலக்கியத்தின் நயங்களை விளக்கத்தான் செய்கின்றன. ஆனால் அவைகள் இலக்கியத் திறனாய்வு நூற்களாகக் கருதப்படமாட்டா. இவ் வுரைகளின் கண்ணோட்டமும் போக்கும் வேறு; திறனாய்வின் கண்ணோட்டமும் போக்கும் வேறு என்பதை நாம் புரிந்துகொள்ள முடிகிறது. தமிழ் இலக்கியப் பரப்பில் திறனாய்வு நூற்கள் இல்லாத குறையை நாம் ஒத்துக்கொண்டுதான் ஆகவேண்டும்.

தமிழ் அறிஞர்கள் இக் குறையை ஓரளவு உணர்ந்துள்ளனர். இக் குறையை நீக்க முயன்றும் உள்ளனர். அவர்களின் முயற்சியின் பயனாகச் சில சிறந்த திறனாய்வு நூற்கள் அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ளன. வ. வெ. சு. ஐயர் அவர்களின் கம்ப இராமாயணம் பற்றிய ‘இரசனை’யும் ‘டாக்டர்’ மு. வ. அவர்களின் ‘இலக்கிய ஆராய்ச்சி’யும் அறிஞர் அ. ச. ஞானசம்பந்தனார் அவர்களின் ‘இலக்கியக் கலை’யும் இரகுநாதன் அவர்களின் ‘இலக்கிய விமர்சன’மும் இவற்றுள் குறிப்பிடத் தகுந்தன. சிலப்பதிகாரம் கம்ப இராமாயணம் திருக்குறள் போன்ற நூற்களுக்குச் சில ஆராய்ச்சி நூற்கள் வெளிவந்துள்ளன. இன்னும் சில அறிஞர்கள் சில நூற்கட்கு முன்னுரையாகவும் சில இதழ்களில் கட்டுரைகளாகவும் எழுதியுள்ளவை தமிழகத்தில் இத்துறையில் முன்னேற்றம் காண அடிகோலுவனவாக அமைந்துள்ளன. இத் துறையில் பல்வேறு நூற்கள் வெளிவர அறிஞர்கள் ஊக்கம் கொண்டு உழைத்தல் தமிழின் வளர்ச்சிக்கு இன்றியமையாத சிறந்த ஒரு பணியாகும்.

இலக்கியத் திறனாய்வு மேலை நாட்டில் வானளாவ வளர்ந்திருப்பதைக் காணலாம். அரிஸ்டாட்டிலின் காலத்துக்கு முன்னாலேயே அவர்கள் இத்துறையில் நுழைந்துள்ளனர். அவர்களிடம் காணப்படும் பழமையும் வளர்ச்சியும் நம்மை அறியாமலே நம்மை

---

1. Herodotus. 2. Thucydides. 3. Livy. 4. Tacitus.

அவர்கள்பால் ஈர்த்து விடுகின்றன. கலை, கவிதை, காப்பியம், உரைநடை, புதினம், நாடகம், சிறுகதை என்றின்னோரன்ன பல துறைகளில் பல்வேறு அறிஞர்கள் பல்வேறு காலங்களில் பல்வேறு கோணங்களிலிருந்து ஆராய்ந்துள்ளனர். இதன் பயனாக எண்ணற்ற இறவாத நூற்கள் தோன்றியுள்ளன. அவைகளின் பெருமையையும் பேரளவையும் காணக்காணப் பாரதியாரின் 'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்ற ஆணை காதுகளில் அலைமோதுகிறது.

இத்தகைய திறனாய்வு என்று தோன்றிற்று? என்ற வினாவுக்கு விடை காணவேண்டியது நம்முடைய கடமையாகும். கலை என்று தோன்றிற்றோ அன்றே திறனாய்வு தோன்றிற்று என்றும், இலக்கியம் என்று தோன்றிற்றோ அன்றே இலக்கியத் திறனாய்வு தோன்றிற்று என்றும் மிக எளிதில் கூறிவிடலாம். இக்கூற்றுக்குப் பல்வேறு சான்றுகளையும் தந்துவிடலாம். இன்னும் சிறிது ஆழமாகச் சிந்தித்தால் கலையும் அதன் ஒரு பிரிவாகிய இலக்கியமும் தோன்ற அடிப்படைக் காரணம் ஒருவகைத் திறனாய்வு என்பது புலப்படும். கலைக்குப் பின்னால் ஒருவகைத் திறனாய்வைக் காண்பதுபோல் கலைக்கு முன்னாலும் ஒருவகைத் திறனாய்வைக் காணலாம். வாழ்வின் திறனாய்வுதானே கலை? கலை முகிழ்க்க ஒருவகையான திறனாய்வு தேவையல்லவா? கவிதை வாழ்வின் திறனாய்வு என்றார், திரு. மாத்யூ ஆர்னல்ட். அவரின் ஆய்வுரையை எல்லாக் கலைகட்கும் கொண்டால் திறனாய்வின் தோற்றம் நன்கு புலப்படும். கலைக்கு முன்னால் ஒரு திறனாய்வு உளது. இதே போன்று கலைக்குப் பின்னாலும் திறனாய்வு உளது. திறனாய்வு என்ற உடன் நம் உள்ளத்தில் இரண்டாவது திறனாய்வு தான் இடம் பெறுகிறது. இதனை அறிஞர்கள் [1] திறனாய்வின் திறனாய்வு என்பர்.

சிறந்த தச்சன் நாற்காலி ஒன்றைச் செய்கிறான். பார்வைக்கு அழகாக இருக்கிறது. சிறந்த வேலைப்பாடு உடையது. நற்பயனும் உடையது. இத்தனை இருந்தும் அதனை ஒரு கலைப்பொருளாக நாம் கொள்ளுவதில்லை. அவனைக் கலைஞன் என்றும் கூறுவதில்லை. ஆனால் அதே தச்சன் பலகையில் மனித உருவத்தைச் செதுக்குகிறான் என்று வைத்துக்கொள்ளுவோம். மனிதன் எலும்பும் தோலும் சதையும் குருதியும் பெற்றவன். நாடிகளையும் நரம்புகளையும் கொண்டவன். இதேபோன்று இன்னும் எத்தனையோ இலக்கணங்களைப் பெற்றுள்ளான். தச்சன் செதுக்கிய மனித உருவத்தில் இவை ஒன்றையும் நாம் காண்பதில்லை. ஆனால் அவ்வுருவம் நம் உள்ளத்தில் ஒருவித உணர்ச்சியை ஊட்டுகிறது.

---

1. **Criticism of a criticism.**

தச்சன் தான் நேராகக் காணும் மனிதனைப்பற்றிய தன் எண்ணத்தை அவ் வுருவத்தில் செதுக்குகிறான். இதேபோன்று தான் சிற்பியும் சிற்பமும் அவ்வுருவமும் கலைப்பொருட்களாகின்றன. சிற்பியும் தச்சனும் கலைஞர்கள் என்றழைக்கப்படுகின்றனர். நாம் நேரில் காணும் மனிதனை அவர்கள் நிறுத்தவில்லை. மனிதனைப் பற்றிய தங்கள் தங்கள் எண்ணத்தை, ஆய்வினை அங்கு வடிக்கின்றனர். செதுக்கப்பட்ட உருவத்தையோ சிற்பத்தையோ காணுகின்றபோது எழுகின்ற உணர்ச்சி நேரடியாக மனிதனைக் காணுகின்றபோது ஏற்படுவதில்லை.

கவிதை சிறந்த கலை. வாழ்விலிருந்து முகிழ்ப்பதுதான் கவிதை. ஆயினும் வாழ்கின்ற எல்லோரும் கவிஞர்களாக இருப்பதில்லை. கவிஞர்களுள்ளும் எல்லோரும் கம்பனாகவும் இளங்கோவாகவும் விளங்குவதில்லை. அவர்கள் வாழ்வின் போக்கை ஆய்வதிலும் ஆய்ந்ததை வெளிப்படுத்துவதிலும் நம்மிலிருந்து வேறுபட்டவர்கள். இளங்கோ கண்ணகியின் வாழ்வைக் கண்டார். கண்டபோது பல்வேறு எண்ணங்கள் உணர்ச்சிகள் கற்பனைகள் அவருக்கு உண்டாயின. அவற்றை எல்லாம் ஒன்றாக இணைத்துப் பிறருக்கு இன்பம் கொடுக்கும் விதத்தில் உருக் கொடுத்தார். கவிதை என்பது அக் கலைதானே?[1] அதுவே இன்று நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் சிலப்பதிகாரம். கண்ணகியின் வாழ்வின் ஒருவகைத் திறனாய்வுதான் சிலப்பதிகாரம் என்னும் கவிதைக் கருவூலம். நாமும் இன்று நம்மிடையே சில கண்ணகிகளைக் காணலாம். ஆனால் அவர்களின் வாழ்வைக் காணும்போது இளங்கோவுக்கு ஏற்பட்ட எண்ணங்கள் உணர்ச்சிகள் நமக்கு ஏற்படுவதில்லை. ஏற்பட்டாலும் அவற்றிற்கு உருக் கொடுக்க நம்மால் முடிவதில்லை. இங்கிலையில்தான் சாதாரண மனிதனும் கவிஞனும் வேறுபடுகின்றனர். கண்ணகியின் கதையைப் படிக்கும்போது உண்டாகும் உணர்வு பக்கத்து வீட்டுக் கண்ணகியைக் காணும்போது உண்டாவதில்லை. நாடகத்தில் நல்லதங்காளைக் காணும்போது உண்டாகும் உணர்ச்சி வறுமையின் காரணமாகக் குழந்தைகளைக் கிணற்றில் தள்ளித் தானும் கிணற்றில் குதிக்க இருக்கும் இருபதாவது நூற்றாண்டு நல்லதங்காளைக் காணும்போது ஏற்படுவதில்லை. இதுதான் கலைக்கும் உண்மைக்கும் உள்ள வேற்றுமை.

இத்தகைய நிலையை எல்லாக் கலைகளிலும் காணலாம். கலைகள் தோன்றிப் பெருகக் காரணம் கலைஞர்கள் வாழ்வைப் பல்வேறு கோணங்களினின்றும் ஆய்வதுதான். கலைகளைத்

---

1. **Poetry is the art of uniting feeling and pleasure with the help of imagination.**

தோற்றுவிப்பவர் அனைவருமே ஒருவகைத் திறனாய்வாளர்கள். ஆனால் அவர்களைக் கலைஞர்கள், கவிஞர்கள், சிற்பிகள் என்பன போன்ற பெயர்களால் அழைக்கிறோமேயன்றித் திறனாய்வாளர்கள் என்று அழைப்பதில்லை. கம்பனையோ இளங்கோவையோ மில்டனையோ திறனாய்வாளர்கள் என்று எண்ணுவதேயில்லை.

இவர்கள் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகின்றனர். வாழ்வின் இன்ப துன்பங்களைப் படி எடுத்து வைக்கின்றனர். வாழ்வின் பொருளை நன்றாக அறிந்து கூறுகின்றனர். இலக்கியம் என்பது அதுதானே?[1] இவர்களின் கண்ணோட்டத்தின் எல்லையைக் கணக்கிட முடியாது. உலகெங்கும் செல்ல உரிமை பெற்றவர்கள். எப்பொருளையும் தங்கள் கவிதையில் வடிக்க உரிமையுடையவர்கள். அவர்களின் எல்லையை அவர்களே கணக்கிட்டுக் கொள்ளுகின்றனர். நமக்கு அதைப்பற்றிக் கேட்கஉரிமை இல்லை.

ஆனால் இலக்கியத் திறனாய்வு செய்பவர்கட்கு இத்தனை உரிமை இல்லை. அவர்களின் எல்லை கவிஞர்களின் எல்லையை விடக் குறைந்தது. சிலப்பதிகாரத்தைத் திறனாய்வு செய்பவன் அதன் உள்ளேயே நிற்றல்வேண்டும். வேண்டுமானால் பிற புலவர்களுடன் ஒப்பிடும்போது சிறிது விரிந்து செல்லலாம். இளங்கோ கூறியதற்குத் திறனாய்வேயன்றி "அவர் ஏன் இதைக் கூறவில்லை? இதை எப்படிக் கூறலாம்?" என்றின்னோரன்ன வினாக்களை எழுப்புதல் எல்லை கடந்த நிலையாகும். எப்படியாயினும் கவிஞனின் எல்லையைவிடத் திறனாய்வாளனின் எல்லை சுருங்கியதாகும்.

அவனுடைய எல்லை சுருங்கியதாயினும் அவன் கடமை பெரிதாகும். நடுநிலைமையில் நின்று இலக்கியங்களை ஆராய்ந்து கூறவேண்டியது அவன் கடமையாகும். சிறந்த திறனாய்வாளன் கவிஞனின் உள்ளத்தை நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும். அப்படியானால் மாத்திரமே அவன் கவிஞனின் கவிதைக்கடலுள் மூழ்கிச் சிறந்த முத்துக்களை எடுத்து உலகுக்கு அளிக்க முடியும். இதற்கும் கவித்துவம் வேண்டும் என்று கருதுகின்றனர் திரு. பென்சான்சன் போன்ற அறிஞர்கள்.[2] இது சிறிது மிகைப்படுத்திக் கூறியதாக அமைந்திருந்த போதிலும் ஓரளவு உண்மையாகும். கவிஞனாக இல்லாவிடினும் திறனாய்வாளன் உண்மைக் கவித்துவத்தை உணருபவனாகவாவது இருத்தல் வேண்டும். சிறந்த கவிஞர்கள் எல்லோரும் சிறந்த திறனாய்வாளர்

---

1. Literature is a copy of life.
   Literature is an interpretation of life.

2 To judge of poet is only the faculty of poets; and not all the poets but the best.

களாகவும் சிறந்த திறனய்வாளர்கள் எல்லோரும் சிறந்த கவிஞர் களாகவும் இருப்பதில்லை. கலைகள் தனிப்பண்பு வாய்ந்தவை. கலைப்பண்பு எல்லோரிட மும் அமைந்து காணப்படுவதில்லை. காரிகை கற்றவர்கள் அனைவரும் சிறந்த கவிஞர்களாக விளங்கு வதில்லை. ஆனல் காரிகையை வரன் முறையாகக் கற்காதவர்கள் சிலர் உள்ளத்தைத் தொடும்படியான கவிதைகளை ஆக்குகின்ற னர். இந் நிலையை எல்லாக் கலைகளிலும் காணலாம். இதே போன்றுதான் திறனய்வும். சிறந்த கல்வியறிவுடையவர்கள் அனை வரும் சிறந்த திறனய்வாளர்களாக விளங்குவதில்லை. இயற்கையாக அதற்குரிய பண்பு அமைந்திருத்தல் வேண்டும். அப் பண்புக்குப் பக்கத்துணையாக கற்ற கல்வியும் அதனல் ஏற்படுகின்ற அறிவும் அமைகின்றன. எனவே இவ்வியற்கைப்பண்பும் அறிவும் ஒரு வனைச் சிறந்த திறனய்வாளனக ஆக்குகின்றன. இதுவே அறிஞர் சான்சன் கருத்து.[1]

இத்தகைய திறனய்வாளர்கள் சிறந்த கருத்துக்களை உலகத் துக்குக் கொடுத்துள்ளனர். இலக்கியங்களைப் பல்வேறு கோணங் களில் நின்று ஆய்ந்து நிறைகளையும் குறைகளையும் கூறி உள்ளனர். மேனட்டு இலக்கியப் பகுதிகளில் இவர்களுடைய பங்கும் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. ஆங்கில நாடக மன்னராகிய செகப் பிரியரை நன்ருகப் புரிந்துகொள்ளப் பிராட்லியை நன்ருக அறிய வேண்டும். அத்தகைய நிலையை இலக்கியத் திறனய்வாளர்கள் அடைந்துள்ளனர். இவர்களுடைய திறனய்வு நூற்கள் [2]படையல் இலக்கியங்களினின்றும் எவ்விதத்திலும் குறைந்ததல்ல என்பது திரு. போப் அவர்களின் கருத்தாகும். இவர்கள் இருவரும் தங்கட்கு வேண்டிய அறிவு ஒளியை இறைவனிடம் இருந்தே பெறுகின்றனர். இறைவனிடம் இருந்து கிடைத்த ஒளியைக் கொண்டே இவர்கள் இலக்கியப்பணி புரிகின்றனர் என்ருர் திரு. போப் அவர்கள்[3]

தமிழ் இலக்கியங்களைப் பொறுத்தமட்டில் இந்த நிலை இன் னும் தோன்றவில்லை. எத்தனையோ இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கிருேம். ஆனல் அந்த அளவுக்கேற்பத் திறனய்வு நூற் களைத் தமிழகம் பெறவில்லை. இந்நிலையைத் தேடித் தருவது அறிஞர்களின் கடமையாகும். இப் பணிக்காகத் தமிழகம் ஏங்கிக் கிடக்கிறது என்று கூறுவதில் மிகை ஒன்றும் இல்லை. இவ்வேக்கம் தீரும் நாள் எந்நாளோ ?

---

1. Nature and learning had qualified for judges.
2. Creative literature.
3. "Both must alike from Heaven derived their light Those born to judge as well as those to write."

தீப நாடகங்கள்

[திரு. பா. ப்ச்சையப்பன்]

(செல்வி, சிலம்பு ௩-௪ - பரல் - அ, ௩அ0 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோரஸ்: வருவதினை ஒருவாறு பகுத்துணர்ந்து சொல்லுவன்காண்
பெருமகனுர் பிறப்பெதுவோ பெற்றோரார் எனப்பலவாம்
இரவுமறு தினத்திற்குள் இவ்வுலகம் மறையறியும்
மருளகற்றும் தெய்வதமே வாழ்கவுன தருட் டிறமே

ஒதிபன்: பெரியீர், நாம் சொல்லும் இடையன் வருகிறுன், என்று நினைக்கிறேன். அவனுகத்தானிருக்கும். யான் இது வரையில் அவனைப் பார்த்ததில்லையன்றோ? அவனும் நம் கொரிந்தத்து நண்பரும் ஒரு வயதினராகத் தோன்று கின்றனர். அவனை அழைத்து வருபவர்களும் என் ஆட்களே. ஆயினும் உங்களுக்குத்தான் அவன் யார் என்று தெரிய வேண்டும்.

கோரஸ்: ஆம், அவனேதான். அவனை யானறிவேன்.

[வயது முதிர்ந்த இடையன் ஒருவன் வருகிறுன்]

ஒதிபன்: கொரிந்தத்தாரே! நீங்கள் பார்த்துச் சொல்லுங்கள்! இவன்தானு?

செய்திசொல்லி: இவனேதான்.

ஒதிபன்: கிழவா, என்னைப்பார், யான் கேட்பனவற்றுக்கு விடையளி. நீ இலேயர் வீட்டில் வேலையாளாக இருந்தாயா?

இடையன்: இருந்தேன். இங்குத்தான் பிறந்து வளர்ந்தேன்.

ஒதிபன்: உனக்கு என்ன தொழில்?

இடையன்: பெரும்பாலும் ஆடு மேய்ப்பதுதான்!

ஒதிபன்: நாட்டின் எப்பகுதியிலிருந்து வருவது?

இடையன்: சிதாரன் பக்கத்தில்தான்!

ஒதிபன்: இவரை இதற்குமுன் பார்த்ததுண்டோ?

இடையன்: யாரை? இவரையா? எங்குப் பார்த்திருப்பேன்?

ஒதிபன்: இவரைத்தான் எங்கேனும் எப்போதேனும் பார்த்த துண்டோ?

இடையன்: எனக்கு நினைவில்லையே!

செய்திசொல்லி: இது பெரிதல்ல. நான் அவனுக்கு நினைப் பூட்டுவேன். நானும் அவனும் அண்டை அயலில் இருந்து வந்தவர்கள். அவனுக்கு இரண்டு மந்தைகள். எனக்கு ஒன்றுதான். ஒன்பது மாதங்கள் ஒன்ருகக் கழித்தோம். மழைக் காலத்தில் நான் கொரிந்தத்திற்குச் சென்றேன். அவன் தீபத்திற்கு வந்துவிட்டான்.

இடையன்: ஆம். அது பல ஆண்டுகட்கு முன்பல்லவோ?

செய்திசொல்லி: ஆயின், நீ எனக்கு ஒரு குழந்தையைக் கொடுத்தது நினைவில்லையா? கொடுத்து என் மகனைப்போல் வளர்த்துக் கொள்ளச் சொல்லவில்லையா?

இடையன்: (மருண்டு) என்ன நினைத்துக்கொண்டாய்? என்ன சொல்லக் கேட்கிருய்?

செய்திசொல்லி: இங்கே நிற்பவர் நீ கொடுத்த குழந்தைதான்.

இடையன்: கெடுவோனே! வாயை மூடு!

ஒதிபன்: சொல் கிழவா! அஞ்சாமல் கூறு! உன்னிலும் அவர் நல்லவர் போலிருக்கிருர்! உண்மையைக் கூறுகிருர்?

இடையன்: அரசே! நான் பொய் ஒன்றும் சொல்லவில்லையே. ஏன் கோபங்கொள்ளுகிறீர்கள்?

ஒதிபன்: அவர் கேட்டதற்கு நேர்விடை சொல்லாததற்குத் தான் கோபப்படுகிறேன்.

இடையன்: அவர் சொல்வதன் விளைவு இன்னதென்று அறியாமற் பேசுகிருர்!

ஒதிபன்: நீ உண்மையைச் சொல்லவில்லையாயின், அதனைச் சொல்லும்படி செய்வோம்.

இடையன்: இவ்வேழைக் கிழவனை ஒன்றும் செய்யாதீர்கள். அரசே, தெய்வத்தின் பெயரில் அன்பு காட்டுங்கள்!

ஒதிபன்: அவன் கைகளைக் கட்டுங்கள்!

இடையன்: இது என்ன கேடு! இன்னும் என்ன சொல்ல வேண்டும் நான்?

ஒதிபன்: அவர் சொல்லிய குழந்தை நீ கொடுத்ததா?

இடையன்: ஆம், கொடுத்த அன்றே நான் இறந்திருக்கக் கூடாதா?

ஒதிபன் : இப்போதுதான் என்ன? உண்மையைச் சொல்லும் வரையில் உன் உயிர் உனதல்லவே!

இடையன் : உண்மையை உரைத்தால் அது என் மரணத்தில் தான் முடியும்!

ஒதிபன் : இன்னுமா மறைக்க முயல்கிறாய்!

இடையன் : நான்தான் குழந்தையை அவனிடத்தில் கொடுத்த தாகச் சொல்லிவிட்டேனே! இன்னும் என்ன சொல்ல வேண்டும்?

ஒதிபன் : அக்குழந்தை எங்கிருந்து கிடைத்தது? உன் குடியிற் பிறந்ததா? அன்றி அக்குழந்தை வேறு குடியிற் பிறந்ததா?

இடையன் : என்னுடையதல்ல; வேறு ஒருவருடையது.

ஒதிபன் : எவன் குடியினது?

இடையன் : தெய்வத்தின் மேலாணை! என்னை மேலும் கேட்கா தீர்கள்!

ஒதிபன் : கேட்டதற்குத் தக்க விடையினைச் சொல்! சொல்லா விடில் இறந்து படுவாய்!

இடையன் : அது........இலேயர் வீட்டுக் குழந்தை.

ஒதிபன் : இலேயர் அடிமையின் குழந்தையா? அன்றி அவருடையதுவோ?

இடையன் : அதைச் சொல்லவேண்டுமா?

ஒதிபன் : சொல்லத்தான் வேண்டும், நான் கேட்கத்தான் வேண்டும்.

இடையன் : அது இலேயருடைய குழந்தைதான் என்றனர். உங்கள் தலைவியார் அதன் உண்மையைச் சொல்லக் கூடும்.

ஒதிபன் : இவள் உன்னிடம் கொடுத்தாளா?

இடையன் : ஆம் பெருமானே!

ஒதிபன் : எதற்காகவோ?

இடையன் : கொன்று போட!

ஒதிபன் : தான் பெற்ற குழந்தையினையா?

இடையன் : ஆம் பெருமானே! ஏதோ, அது பழியினைச் சுமந் தது என்பதால்

ஓதிபன் : என்ன பழியாம்?

இடையன் : அது தன் தந்தையைக் கொல்லும் என்பதாம்!

ஓதிபன் : தெய்வத்தின்மேல் ஆணையிட்டுக் கேட்கிறேன்; சொல், ஏன் அதனை இவனிடம் கொடுத்தாய்?

இடையன் : குழந்தையைக் கொல்ல மனமற்றவனாகத்தான் பெருமானே! இவனிடம் கொடுத்து வேற்று நாட்டுக்கு அனுப்பிவிட்டேன். இவனும் எடுத்துக்கொண்டான். உயிரைக் காப்பாற்றினான். நீங்கள்தாம் அக் குழந்தை யெனின் உங்கள் உயிர்....

ஓதிபன் : ஆ, எல்லாம் வெளியாயிற்று. மறைக்க ஒன்றும் இனியில்லை. ஒளியே இனி உன்னைக் காண என் கண் கூசும். நான் யார், யான் செய்த தீமை என்ன என்பது விளக்கமாயிற்று, தீமணம்! கொலை! இனி ஆவது என்ன இருக்கிறது.

[செல்கிறான்.]

[செய்தி சொல்லியும், இடையனும் புறப்பட்டுப் போகிறார்கள்.]

கோரஸ் :

மறைவழியில் வந்தவன்கொள் மகிழ்ச்சியதும் மயக்கமதோ
நிறையறிவும் வலிவுமென நீள்புகழில் நிலத்துளத்தில்
இறையவனாய் இருந்தவந்த இவ்வொதிபன் இழிந்தவனே
குறையேதும் இலையெனுமோர் குணவானும் இலையென்பேன்.

அரக்கிதனை அழித்தனனால் அரசுபுரிந் தெழுந்தானால்
இரக்கமுடன் எழுந்தானால் இவன்பெருமைக் கிலக்கினன்
பரிதபிக்க இன்றுவரும் பரிபவமும் பாடுவதோ
அரிதரிது மனத்துயரை மாற்றுவதும் அரிதாமால்.

தனையளித்துத் தளையிட்ட தந்தையினைக் கொன்றவனே
தனையளித்துத் தவிக்கவிட்ட தாயவளை மணந்தானே
வினையனைத்தும் காலத்தின் விளைவாமோ விதியிதுவோ
வினவிடிலோ இதுதானே விளங்குமுன திரங்கிலிசை.

[அரண்மனையிலிருந்து ஒருவன் வருகிறான்.]

வந்தவன் : தீபநகரத்துப் பெரியீர்! நீங்கள் உண்மையானவர் களாயின் நீங்கள் இனிக் கேட்கப்போவனவற்றுக்காக இரங் குங்கள்! நீங்கள் காணப் போவதற்காக வருந்துங்கள்! இலபடகர் வழியினர்க்கு வேண்டுமென்று தேடிக்கொண்ட கொடுமையினைக் கண்டு, கேட்டு உணர்ந்தீர்களானால், இக் கொடும்பழியினைத் துடைத்துப் போக்க இத்தராற்று நீரும், பாசியாற்று நீரும் பற்றாது!

கோரஸ்: இதுவரைக் கேட்டவற்றுக்குக் கண்ணீர் வடித்தா யிற்று. இனிக் கேட்பதற்கும் ஒன்றுண்டோ! என்ன சொல்லப் போகிறாய்?

வந்தவன்: சுருக்கமாக முதலில் சொல்வேன். அரசி இறந்தார்.

கோரஸ்: ஐயோ! எப்படி இறந்து போனார்?

வந்தவன்: தம் கையால் இக் கொடுவினையைச் செய்து கொண்டார். நான் கண்டதைச் சொல்லுகிறேன். உங்கள் முன்னிலையினின்றும் அச்சத்துடன் சென்றவர் தம் மணவறைக்குள் புகுந்து தலைமயிரைப் பிய்த்து இறந்து பட்ட தம் கணவன் இலேயரை நினைந்து அலறி அழுதார். முன்னாள் பெற்றெடுத்த குழந்தையினையும், அது மறைந்த செய்தியையும், பின் அக் குழந்தையால் அரசர்க்கு நேர்ந்த மரணத்தையும் சொல்லி அழுதார். மகனை மணந்து மக்களைப் பெற்ற தீவினையை வெளியிட்டழுதார். இவைகள் எங்கள் காதுபட வருந்தி நின்றோம். அவர் இறந்து பட்டது எங்க ளுக்குத் தெரியவில்லை. இதற்குள் அரசர் அரற்றிக்கொண்டே அங்குவந்தார். கத்தி, கத்தி என்று கத்தினார். மனைவி எங்கே, மனைவியுமல்லள் என்னை ஈன்றவள் என் மக்களை ஈன்றாள். என்று பல பேசிக்கொண்டிருந்தவர் மனத்தில் மாயப்பேய் புகுந்துகொண்டது போலும்! ஏனெனில் அவர் துயரைக்கண்ட எங்களால் ஒன்றும் செய்ய இயலவில்லை! அவர் துயரைப் பார்த்து மயங்கி நின்றோம். இதற்குள் ஏதோ ஒன்றால் உந்தப் பெற்றவராய் அரசர் அரசியின் மணவறைக் கதவினை முட்டித்தள்ளினார். கதவுத்தாள் பெயர்ந்து விழுந்தது. அரசர் உள்ளே ஓடினார். அரசி கயிற்றில் தொங்கியதைக் கண்டோம். அரசரும் பார்த்தார். மனத்தை உருக்கும் அரற்றலோடு கயிற்றினை அறுத்தார். தரையில் கிடத்தினார். இனித் தான் காண்பதற்குக் கூசுவது நேர்ந்தது. அரசி அணிந்திருந்த கோப்பூசியைக் கழற்றி அரசர் தம்கை நீளுமளவும் ஓச்சிப் பின் கண்களை நோக்கிக் குத்திக்கொண்டார். தம் கொடுமைக்கு ஆற்றாதார் கண்களைக் குத்திக்கொண்டார். இத் தீமையினைக் காணாத வாறு செய்துகொண்டார். மறுமுறையும் மறுமுறையும் எனப் பன்முறையும் குத்திக்கொண்டார். கண்களிலிருந்து வந்த இரத்தப் பெருக்கால் மங்கின. இருவர் பழியும் இவ்வாறு நேர்ந்தது. ஒருதலையன்றி இருதலைகள் பழிக் காளாயின. இவர்கள் இன்பவாழ்வு நீதிவழி நேர்ந்தவை தான். ஆயின் இன்றோ குழப்பம், கொலை, அழிவு, துயரக் கண்ணீர், பழி என நாமெல்லாம் சுமக்கும் தீமையாயிற்று.

கோரஸ்: அரசர் இப்போதெப்படியுள்ளார்?

வந்தவன்: வெளிச்சென்று தீபநகரத்து மக்களை அழைத்து வாருங்கள்; அழைத்து வந்து தந்தையைக் கொன்றவனைக் காட்டுங்கள். பழி தீர்ந்தது என்று சொல்லுங்கள் என்று ஆரற்றினர். அரசர் வலிவற்றவரானர். அக் கொடுங் காட்சியை நீங்கள் காண்பீர்களாக. கதவும் திறக்கிறது.

[குருடனாக ஒதிபன் வருகிறான்.]

ஆ; கொடுமை! தாங்கொணாதது!
என்றும் யான் கண்டிராதது,
உளமுருக்கும் உருக்குலைவு!
அறிவகற்றும் அவமிதுவே!
எவ்விதியின் அரக்கனுனை
இவ்வழியில் மிகவிரைவாய்
அழித்துனினை மிதித்துவிட்டான்!
விழிபிதுங்க நிலைமாற!
நினைக்காண மனமகிழ்ந்த
என்கண்கள் கூசுவன
சொல்கேட்டு மகிழ்செவியும்
அல்லலினைக் கேட்டிரங்கும்.

ஒதிபன்: ஆ தாங்கொணாத் துன்பம்! நான் எங்கே இருக்கிறேன். இதுவோ என் குரல், எனக்குற்ற தீவிதிதான் என்னவோ?

கோரஸ்: கேட்க அஞ்சுவது! காணக் கூசுவது.

ஒதிபன்: ஆ, தாங்கவெண்ணா இரவே! விடுவித்துக் கொள்ள முடியா இரவே! பகலே இல்லாத காரிருளே! காற்றடியாக் கருமேகமே! ஆ! கண் குத்துகிறதே, தீவினையைச் சுட்டிக் காட்டுகிறதே.

கோரஸ்: இத் துன்பம் இருமுறை பெறவேண்டுவதோ? ஒன்று உடலுணர்வில் தாக்குவது! மறுமுறை உள்ளத்தைத் தாக்குவது!

ஒதிபன்: பேசுவது யார்? என் உண்மை நண்பரா? இன்னும் என் பக்கந்தான் உள்ளாரா? உங்கள் கை இக் குருடனுக்கு வழிகாட்டி! என் அருகேதான் இன்னும் உள்ளீரா? என் கண்கள் உங்களைக் காணா விடினும் யான் கேட்கும் குரல் உங்களுடையதே!

(தொடரும்)

திருவள்ளுவர் வாழ்த்தும் ஆதிபகவன்

[வித்துவான், திரு. ஆ. சிவலிங்கனுர், மயிலம்]

“ அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு ”

இக்குறளில் வந்த ‘ஆதிபகவன்’ என்பது தத்தம் சமயக் கடவுளரையே குறிக்கும் என்பர் சமயவாதிகள். அவ்வாறு கூறிக் கொள்வதாலும் அதற்கேற்பத் தத்தம் சமய நூல்களிலிருந்து சான்றுகள் காட்டுவதாலும் குற்றங்கள் நேரா. ஆனல் பிற சமயத்தவர் கூறுவனவற்றை மறுக்கும்போதே குற்றங்கள் நேரும். அவ்வாறு நேராதபடி முறையோடு மறுப்பதே சாலச் சிறந்ததாகும். உயர்திரு. ஜீவபந்து, T. S. ஸ்ரீபால் அவர்கள், தாம் எழுதிய “திருவள்ளுவர் வாழ்த்தும் ஆதிபகவன்” என்னும் நூலில் ‘ஆதிபகவன்’ என்பது சமண சமய முதல்வராகிய ரிஷப தேவரைக் குறிக்கும் என்றெழுதியுள்ளார்கள். அவ்வாறு எழுதியது தவறில்லை. ஆனல் பிறர்கருத்தை மறுத்த முறை தான் மிகமிகத் தவறுடையதாகும். அதனல் அவர் மறுப்புப் பொருத்தமில்லை யென்பதைமட்டும் எழுத விரும்புகின்றேம். ‘ஆதிபகவன்’ என்பது யாரைக் குறிக்கும் என்பதைக் கூறவரவில்லை. இதை மனங்கொண்டு அன்பர்கள் இக்கட்டுரையைக் காண வேண்டுகின்றேம்.

இக்குறளின் பொருளும் விசேடமும் ஆகப் பரிமேலழகர் கூறியனவற்றைக் காண்போம்.

“ எழுத்துக்க ளெல்லாம் அகரமாகிய முதலை யுடையன; அதுபோல உலகம் ஆதிபகவனுகிய முதலை யுடைத்து.” என்பது அவர் எழுதிய பொருள்.

“ இது தலைமைபற்றி வந்த எடுத்துக் காட்டுவமை. அகரத்திற்குத் தலைமை விகாரத்தா னன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கையுணர்வானன்றி இயற்கையுணர்வான் முற்றும் உணர்தலானும் கொள்க. தமிழ் எழுத்திற்கேயன்றி வடவெழுத்திற்கும் முதலாதல் நோக்கி எழுத்தெல்லாம் என்றூர். ஆதிபகவன் என்னும் இருபெயர் ஒட்டுப் பண்புத்தொகை வடநூல் முடிபு. உலகு என்றது ஈண்டு உயிர்கள்மேல் நின்றது. காணப்பட்ட உலகத்தால் காணப் படாத கடவுட்கு உண்மைகூற வேண்டுதலின் ஆதிபகவன் முதற்றே யென உலகின் மேல் வைத்துக் கூறினர்; கூறினரேனும் உலகிற்கு முதல் ஆதிபகவன் என்பது கருத்தாகக் கொள்க.

ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. இப்பாட்டானே முதற் கடவுளது உண்மை கூறப்பட்டது.'' என்பது அவர் எழுதிய விசேடவுரை. இவ்வுரையை மேற்கூறிய நூல் ஆசிரியரவர்கள் ஒப்பவில்லை. என்றாலும் சான்றுகாட்டி மறுக்கவேண்டும். அவ்வாறின்றி எள்ளல் முறையில் கூறுகின்றார்கள். அவர்கள் கூற்றைக் காண்க :

"இவ்விளக்கவுரையை நுணுக்கமாக ஆராயின் பரிமேலழகரின் குழப்பநிலை வெளியாகிறது. உலகப் பொதுமறையாம் திருக்குறளை ஒரு சமயச் சார்புடையதாகக்கொள்ள வேண்டி, அவர் அறிவு படும்பாடு, அப்பப்பா! அளவிடற்பாலதன்று; "விகாரத்தானன்றி," "நாதமாத்திரை," "இயல்பாற் பிறந்தது," "செயற்கை யுணர்வு," "காணப்பட்ட வுலகம், காணப்படாத கடவுள்" "கூறினுரேனும்," "கருத்தாகக் கொளக," "முதற் கடவுள் உண்மை" ஆகியவை போன்ற சொற்களாகிய மயக்க மருந்தால் நமது அறிவைச் சுழற்றுகின்றார் பரிமேலழகர். அம் மருந்தையருந்தி மயக்கமுற்றோர் பலருண்டு. அச்சமயவாத மருந்து நமக்கு வெண்டா.

> "சமயக் கணக்கர் மதிவழிகூறாது உலகியல்கூறிப்
> பொருளிது வென்ற வள்ளுவர்."

எனத் திருக்குறளாசிரியரின் கடவுட்கொள்கையைக் களங்கமறக் கண்ட கல்லாடனுர் கருத்துவழி நின்று ஆராய்வோம்.'' (பக். எ)
இவ்வாறு பரிமேலழகரைப்பற்றிக்கூறிய ஆசிரியரவர்கள் தாமும் கல்லாடனுர், வழிநில்லாமல் சமயக் கணக்கர் வழியேநின்று திருக்குறள் ஆசிரியரின் கடவுட் கொள்கையைக் களங்கம் உறக் கண்டவாற்றினை இனிக் காண்போம்.

"அகரமுதல என்பதில் முதல என்னும் பன்மைச்சொல் முதல் என்னும் ஒருமையினின்றே பிறந்தது. முதல் என்னும் சொல்லிற்குப் பல பொருளகள் உண்டெனினும் இங்கே எண் வரிசையைக் கொண்டு விளங்குகின்றது. இக்கருத்தின்படி எழுத்துக்கள் எல்லாம் அகரத்தைத் தமக்கு முதலாக அல்லது தலைமையாக வுடையன; அவ்வண்ணமே உலகம் ஆதிபகவனைத் தனக்கு முதலாக அல்லது தலைமையாக வுடையது என்னும் பொருளிலேயே அமைகின்றது; எனவே தலைமைபற்றி வந்த எடுத்துக் காட்டுவமை என்பது தெளிவாகிறது.'' (பக். எ, அ)

பரிமேலழகர் கூறிய 'தலைமைபற்றி வந்த எடுத்துக் காட்டுவமை' என்பதையே ஆசிரியரவர்கள் விளக்கினர்கள். ஆனாலும் முதல் என்பதற்கு எண் வரிசையில் முதல் என்பதுதான் பொருள் என்று கொண்டார்கள். தலைமை என்பதும் முன்

னிற்றலையே குறிக்கும் எனவும் கொண்டார்கள். பரிமேலழகர் கொண்ட தலைமை என்பதற்குரிய இலக்கணத்தைக் கொள்ள வில்லை; மறுப்பும் கூறவில்லை.

'அயோத்தி நகரில் நபிராஜா என்பவருக்கும் அவர் மனைவி மருதேவி என்பவருக்கும் தோன்றிய விருஷபதேவர் என்பவர், உலக மக்கள், மாக்கள் நிலையில் இருப்பதைக் கண்டார்; அவர் களுக்குப் பல திட்டங்களை வகுத்துக் கொடுத்து நல்வழிப்படுத்த எண்ணினார்; மக்கள் அறிவுவளர்ச்சிக்காக அகரமுதலாகிய எழுத்துக்களையும் ஒன்று முதலாகிய எண்களையும் தோற்று வித்துக் கல்வியையும் பல கலைகளையும் வளர்த்தார்; அந்த ரிஷப தேவரே ஆதிபகவன் ஆதலாலும், அவர் தோற்றுவித்த முதல் எழுத்து அகரம் ஆதலாலும், அவ்வகரத்தை முதலாகக் கொண்டே பிறஎழுத்துக்கள் தோன்றின ஆதலாலும் வள்ளுவர் கூறிய ஆதிபகவன் ரிஷபதேவரேயாவர்' என்று நிறுவ முயல் கின்றார்கள். அவர்கள் முயற்சியும் சமயக் கணக்கர் முயற்சியே யன்றி வேறில்லை, ஆசிரியரவர்கள் சைனர் ஆதலின்.

விருஷபதேவர் அகரமுதலிய எழுத்துக்களைப் படைக்கு முன் மக்கள் பேசினரா இல்லையா? எழுதவில்லையென்றாலும் பேசினார்கள் என்பதில் மாறு இராது. பேச்சுக்களில் வந்த எழுத்துக்கள் எத்தகையன? பேச்சுக்களை வைத்து எழுத்துக் களைப் படைக்கத் தொடங்கிய விருஷபதேவர், அகரத்தை ஏன் முதற்கண் படைத்தார்? ஒருவித வலிந்த முயற்சியும் இன்றி இயல்பில்-அஃதாவது பரிமேலழகர் கூறியதுபோல விகாரத்தா னன்றி நாதமாத்திரையாகிய இயல்பில் பிறத்தலான் அன்றோ அதனை முதற்கண் படைத்தார்? இத்தலைமை கருதாமல் படைத் தார் என்றால் அகரத்தை முதற்கண் படைக்கக் காரணம் வேண்டுமே? மக்களை மாக்களாகக் கருதிய தேவர், எழுத்துக் களையும் முறைகருதாமல் - காரணம் கருதாமல் வரிசைப்படுத் தினர் என்று சொல்லலாமோ?

தேவர் அகர எழுத்தை வரிவடிவில் முதலாக வைத்துப் பிற எழுத்துக்களைப் படைத்தாரேயன்றி ஒலிவடிவில் படைக்க வில்லை. அவர்க்கு முன்பே கருத்துக்களைத் தெரிவிக்கும் சொற்கள் மக்களிடையே வழங்கின. சொற்கள் வழங்கவில்லை யென்று சாதிப்பின் ஒலிகளேனும் வழங்கின என்னலாம். அவ் வொலிகளில் முயற்சியின்றி வாயைத்திறந்த அளவில் தோன்றும் ஒலி அகரவொலியாகும். வாயைத்திறந்து பின்னரே நாக்கு முதலிய உறுப்புக்களால் பிறவொலிகளை யெழுப்புதல் வேண்டும். வரிவடிவில் முறைப்படுத்தியபோது தேவர் அகரத்தை முதற் கண் நிறுத்தியிருக்கலாம். ஒலிவடிவில் இருந்த காலத்தில்

அகரத்தை ஒலித்துப் பிறகு மற்றையவற்றை ஒலித்தல் என்ற வழக்கிருந்திராதன்றோ? ஆதலின் எழுத்து வரிவடிவில் சொற்கள் வருவதற்குமுன் பேச்சுவழக்கில் ஒலிவடிவில் மட்டும் இருந்தபோது வரிசை முறையில்லை. அப்போது வழங்கிய ஒலித்த எழுத்துக்களுக்கு ஒலிகளுக்கு முதல் எது? இவ்வினாவுக்கு விடைகூறவியலாது. விடை வேண்டுமாயின் பரிமேலழகர் கூறியதைத்தான் விடையாகக் கொள்ளவேண்டும். ஒழுங்குபெற வரிவடிவில் எழுத்துக்கள் வருவதற்கு முன் ஒலிவடிவில் முறைப்படுத்தப்படாமலே ஒலிக்கப்பட்ட காலத்திலும், அவ்வெழுத்துக்களுக்கெல்லாம் இயல்பிற் பிறக்கும் அகரவெழுத்தே முதன்மையாக நின்றது. அதனை முதலாகக் கொண்டே மற்றையவொலி எழுத்துக்கள் விகாரநிலையில் தோன்றின. அதனால் தான் பரிமேலழகர் அவ்வாறு எழுதினார். அகரத்தின் ஒலியெல்லா வெழுத்துக்களிலும் நிறைந்துளது. அகரவெழுத்தின் ஒலிவழியில்தான் பிறவெழுத்தொலிகள் தோன்றும். அகரவொலி தோன்றவில்லையாயின் பிறவெழுத்தொலிகள் தோன்றா. பிறவெழுத்தொலிகளில் அகரவொலி உள்ளடங்கிக் கிடக்கின்றது. இக்கருத்துக்கொண்டு ஆதிபகவன் முதற்றே யுலகு என்பதைக் காணலாம்.

உலகம் ஆதிபகவனாகிய முதலை யுடைத்து என்பதை நோக்குமிடத்து, உலகம் ஆதிபகவனை முன்னிறுத்திக் கொண்டு பின்னர்த் தோன்றியது என்னலாம். இகரம் முதலியன அகரவொலி யின்றித் தோன்றா. உலகம் ஆதிபகவனை யின்றித் தோன்றாது. இகர முதலியவற்றில் அகரவொலி அடங்கியுள்ளது. உலகத்தில் ஆதிபகவன் மறைந்து நிறைந்துள்ளான். விருஷபதேவர்தான் ஆதிபகவன் என்றால் அவர்க்குமுன் உலகம் இல்லையென்பது பெறப்படும். நபிராஜாவுக்கும் மருதேவிக்கும் தோன்றிய அவர்க்குமுன் உலகம் இல்லையென்று சொல்ல முடியாதல்லவா? அவர் தோன்றுவதற்குமுன் இருந்த உலகம் யாரை முதலாகக் கொண்டது? யாரையும் முதலாகக் கொள்ளவில்லையென்றால் 'அகரமுதல வெழுத்தெல்லாம்' என்ற உவமை பொருந்தாது; பிறவெழுத்துக்கள் தோன்றுமுன் அகரம் தோன்றியதாதலின்; உலகம் தோன்றுமுன் விருஷபதேவர் தோன்றவில்லையல்லவா?

அகளங்கதேவர், "எழுத்துக்கள் அகரத்தை முதலாகவுடையன; தீர்த்தங்கரர்கள் விருஷபதேவரை முதலாகவுடையர்" என்று கூறியதை நாம் காணும்போதும் மேற்சொன்ன கருத்து வலியுறும். அகரம் தோன்றிப் பிறவெழுத்துக்கள் தோன்றின. விருஷபதேவர் தோன்றிய பின்னர்ப் பிறதீர்த்தங்கரர்கள்

தோன்றினர். விருஷபதேவர்க்கு முன்னர்த் தீர்த்தங்கரர் இல்லை. அகரத்துக்குமுன் வேறு எழுத்தில்லை. இப்படிப் பார்க்கும் போது, 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்பதில் ஆதிபகவன் விருஷபதேவராகக் கொண்டால் விருஷபதேவர்க்குமுன் உலகில்லை யென்பதன்றோ பெறப்படும்?

இதுகாறும் கூறியவாற்றால் உவமை வகையில் நிலைநாட்டப் பட்ட ஆதிபகவன் விருஷபதேவர் ஆகார் - அஃதாவது சமண சமய முதல்வராகக் கருதப்படும் விருஷபதேவர் ஆகார் என்பது பெறப்படும். இனிப் பகவன் என்னும் சொல்லைப்பற்றிப் பார்ப்போம்.

பகவன் என்பது வடமொழிச் சொல் என்றும் அதற்குச் 'சர்வக்ஞன்', 'கேவலஞானி' என்பன பொருள் என்றும் கூறினர் ஆசிரியர். அச்சொற்கள் பிறசமயத்தாரும் கையாண்ட சொற்களாதலின் அவைபற்றி ஆதரவாகக் கொள்ளவும் மறுக்கவும் வேண்டியதில்லை. பகவன் என்பதற்கு ஆறு குணங்கள் உடையவன் என்றும் பிறவாறும் கூறினாரும் உளர். இன்றுள்ள கதைத் தொடர்பாக அமைந்த தமிழ்நூல்கள் யாவும் சமயச் சார்புமிக்க காலங்களில் எழுதப்பட்டன. சமயச் சார்பாக ஆதி பகவன் என்பதற்குப் பொருள் கூறுவதாயின் சைவ சமயம் முதலிய பிற சமயச் சார்பாகவும் கொள்ளலாம் அன்றோ?

பகவன் என்பது 'பகு' என்பதனடியாகப் பிறந்த தமிழ்ச் சொல் ஆகும். பகுத்தவன் பகவன் எனப்பட்டான். தன் னுடம்பில் பாதியைப் பகுத்தவன் பகவனாவான். எனவே உமை யொரு பாகனாகிய சிவனே ஆதி பகவனாவான் என்னலாம். அன்றியும், ஆதி என்பது சக்தியைக் குறிக்கும் என்றும், ஆதிக்கு - சக்திக்குத் தன் உடம்பைப் பகுத்தவன் ஆதிபகவன் ஆவான் என்றும் கூறலாம். இன்னும் விரிவாக இதுபற்றிச் சாத்திரத் துணைகொண்டும் கூறலாம். இவ்வாறே திருமால் ஆதிமூலம் எனப்படுவனாதலின் அவனையே ஆதிபகவன் என வள்ளுவர் வணங்கினார் எனவும் வைணவர் கொள்ளலாம்.

பகவன் என்ற சொல்லுக்குரிய பொருள்களைக் கூறவந்த சூடாமணி நிகண்டு ஆசிரியர்,

"பகவனே யீசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்."

என்றார். அவர் பகவன் என்ற சொல் ஈசனைத்தான் முதலில் குறித்ததாகக் கொண்டார். "சிறப்புடைப் பொருளை முந்துறக் கிளத்தல்" என்பதற்கேற்ப ஈசனை முதலில் குறித்தார். 'சிறப் புடைப் பொருளைப் பிந்துறக் கிளத்தல்' என்பதற்கேற்பவேனும்

சினனை யிறுதியில் கூறவில்லை. எனவே எப்படியும் சினன் - அருகன் - விருஷபதேவன் ஆதிக்கடவுளாகான் என்னலாம். சிவபிரானைக் குறிக்க அவ்வாசிரியர் எல்லாக் கடவுளுக்கும் பொதுவான சொல்லாகிய 'ஈசன்' என்ற சொல்லையே கொண்டார். பகவன் என்ற பொதுச்சொல் எப்படிச் சிவபிரானையே முதலில் குறிக்குமோ அப்படியே ஈசன் என்ற பொதுச்சொல்லும் சிவபிரானையே குறிக்கும் என்றெண்ணினர். அதனால்தான், "பகவனே சிவனே" என்று தொடங்காமல், "பகவனே ஈசன்" என்று தொடங்கினர். இவர் கூற்றுப்படியும் ஆதிபகவன் சிவனே என்னலாம்.

> " நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்
> பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈறாக "
>
> (மணிமேகலை. க : ௫௪, ௫௫)

என்றார் சாத்தனர். இவரும் சிவபிரானை முதற்கண் கூறியது காண்க.

இவற்றால் ஆதிபகவன் என்பதைப் பொதுவில் முழுமுதற் கடவுள் என்று கொள்வதைவிட்டுக் காரணம் கருதிக் கொள்வதாயின் எல்லாச் சமயத்தாரும் தத்தம் கடவுளரைக் குறிப்பதாகக் கொள்ள இடமுண்டு. அதற்கேற்ப அடுத்தடுத்துவரும் குறள்களில் உள்ள 'வாலறிவன்' முதலிய சொற்களுக்கும் பொருள்காண இடம் உண்டு. அவற்றிற்கும் பொதுவில் இறையின் குணங்களாகக் கொள்வதே சிறக்கும். இல்லையேல் பிறர் கூறுவனவற்றை எடுத்துக் கூறிப் பொருந்தாமையைக் காட்ட வேண்டும். ஆசிரியர் அவர்கள் அவ்வாறு செய்யாமல் தம் சமயத்துக்கேற்பக் கூறிச் சென்றார்கள். வாலறிவன், மலர்மிசையேகினன் முதலிய சொற்களுக்கும் தம் சமய நூல்களிலிருந்தே சொல்லாட்சிச் சான்று காட்டினர்கள். பிற சமய நூல்களிலும் அச்சொற்கள் ஆளப்பட்டுள்ளன. சைவ சமய நூல்களிலிருந்து மிகுதியும் காட்டலாம். இக்கட்டுரையின் நோக்கம் அஃதன்று ஆதலின் விடுத்து மேற் செல்கின்றேம்.

இனி ஆசிரியர் எழுதிய மாறுபட்ட கருத்துக்கள் சில இன்னும் காட்டுகின்றேம்.

(1) "நமது தமிழ் மறையாகிய திருக்குறள்போற்றும் ஆதிபகவன் கண்கண்டகடவுளா காணாதகடவுளா என்பதைப் பற்றிப் புலவர்களிடையே கருத்து வேற்றுமைகள் வளர்ந்து வருகின்றன." (பக். க) என்று தொடக்கம் செய்கிறார். கண்காணக் கடவுளும் உண்டு என்று ஒப்புக்கொண்ட நிலையில் தொடக்கம் செய்திருப்பது அவர் கொள்கைக்கே மாறுபாடு. ஒப்புக்கொள்ள

வில்லையென்றால் கண்காணு இந்திரன் உண்டென்பதும் ஒப்புக் காள்வதற்கில்லை. ரிஷபதேவருக்குச் சமவசரணம் அமைத்து வழி பட்டான் இந்திரன் என்றெல்லாம் (தம் சமயக் கதையைக்) கூறு கிறார் அவர். இந்திரனைக் கண்டவர் யார்? ரிஷபதேவர் மக்களுள் ஒருவர். அவர் நல்லன புரிந்திருக்கலாம். பிறவும் செய்திருக் கலாம். இந்திரன் வழிபடச் சென்றது முதலிய யாவும் கதைகள் அல்லவா? கண்காணு இந்திரனைப்பற்றிக் கதைகட்டும்போது கண்காணுக் கடவுளும் உண்டென்று ஏன் கொள்ளலாகாது?

(2) "இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து, கெடுக கெடுக உலகியற்றி யான்." என்னும் குறட்பாவில் இவ்வுலகைப் படைத்துக்காத்து அழிக்கும் கடவுளை அச்சமின்றி வெறுக்கின் றார். அவ்வாறு ஒரு கடவுள் இருப்பதாக அவருக்கு நம்பிக்கையு மில்லை." (பக். ௬௫) இவ்வாறு ஆசிரியர் எழுதியுள்ளது எவ்வளவு பொருத்தமற்றது? குறளின் கருத்தையறியாது கூறியதை என் னென நினைப்பது? "உலகியற்றிய கடவுள் ஒருவன் இரந்தும் உயிர் வாழ என்று வேண்டினுனயின் அக்கடவுள் பரந்துகெடுக" என்ற கருத்தில் உள்ள இக்குறளில் ஆசிரியர் கூறிய கருத்தாவுளது? "கடவுள், ஒருவன் இரந்து உயிர்வாழ வேண்டினரில்லை; உலகத் தில் உள்ள ஒருவன் அவ்வாறு தாழ்நிலையடைந்து இரந்து வாழ் கின்றான். அஃது அவன் செயலே யன்றிக் கடவுள் விரும்பிய செயலன்று" என்பதன்றோ கருத்து இக்குறளுக்கு?

(3) "கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன், நற்றாள் தொழாஅ ரெனின்." இக்குறளில் கற்றவரைமட்டும் அழைத்து, 'விருஷபதேவரைக் குருவாக வழிபடுக' என்று வள்ளுவர் கூறி னாராம். 'கற்றதனுல் ஆனபயன் கடவுள் திருவடியை வணங்கு தலே' என்று கூறவந்த குறளில் அவ்வாறு கருத்துக் காணலாமா?

(4) "எழுத்தறி வித்தவன் இறைவ னாகும்." என்ற வெற்றிவேற்கைத் தொடருக்கு "எழுத்தறி வித்தவன் ஆதிபக வான் (விருஷபதேவராவார்)" என்று பொருள் கொண் டார் ஆசிரியர், 'ஆசிரியனை இறைவனுக (கடவுளாக)க் கருத வேண்டும் மாணவன்' என்பதை வற்புறுத்த வந்த தொடராகிய அதற்கு, 'எழுத்தை யார் வெளிப்படுத்தினர்' என்பதைக் கூற வந்ததாகக் கூறியது பெரும் பிழை. வெற்றிவேற்கை ஆசிரியர் அவ்வாறு கூறியிருப்பார் என்று துணிந்து பொருத்தமில்லாமல் எழுதியுள்ளார்கள்.

(5) விருஷபதேவர் நிலையையும் சிவபிரான் நிலையையும் ஒப்பிட்டுக் காணவேண்டும் என்று சில ஒப்புமைகளைக் கூறு கிறார் ஆசிரியர். அவர்கள் கூறும் ஒப்புமை, விருஷபதேவர் வரலாற்றை—குணங்களைச் சிவபிரானுக்குத் திரித்துக் கொண்

டார்கள் சைவர்கள் என்று கொண்டு கூறப்பட்டுள்ளது; ஆதாரம் கூறினார்கள் இல்லை. சைவ சமயக் கொள்கைகளை— சிவனுக்குரிய குணங்களைச் சைனர்கள் திரித்துக் கொண்டார்கள் என்று ஏன் கூறலாகாது? சிவபிரானை உமை யொருபாகன் என்பர் சைவர். விருஷபதேவரைச் சைனர் கேவலஞானக் கிழத்தியைப் பிரியாத பாகன் என்று திரித்துக் கொண்டார்கள். இப்படிப் பல திரிபுகள் கூறலாம்.

சமயம் என்ற குறுகிய அமைப்பில் அடங்காமல் அவரவர் தத்தமக்கு விருப்பமான கடவுளர்களை வழிபட்டு வந்த தமிழகத்தில் சைன பௌத்த சமயத்தவர்களாலேயே சமயங்கள் தோன்றலாயின. 'பள்ளி' என்ற சொல் சைன பௌத்த மடங்களைக் குறிப்பதைக் காணும்போது எங்கிருந்தோ வந்த கூட்டத்தார் (இராமகிருஷ்ண மிஷன், கிறிஸ்தவ மிஷன் போன்று) ஆங்காங்கு மடங்கள் அமைத்துத் தத்தம் சமயங்களைப் பரப்ப முற்பட்டனர் என்பது புலப்படும். வடமொழி வந்த பின்னர்த் தமிழ் தென்மொழி யெனப்பட்டது போல சைன பௌத்தர் அவரால் சிவனை வழிபட்டவர் சைவர் எனவும் திருமாலை (விஷ்ணுவை) வழிபட்டவர் வைஷ்ணவர் எனவும் சமயப்பெயர்கள் கொண்டு பிரிந்தனர். தூய தமிழகத்தில் வடமொழி வந்தமைக்கே சைன பௌத்தர்களே காரணர். தொல்காப்பியத்தில் மாயோன் முதலிய கடவுளர் கூறப்படுதலும் அருகனோ புத்தனோ கூறப்படாமையும் காண்க. சங்க இலக்கியங்களிலும் அவர் பெயர்கள் இல்லாமை காண்க. தமிழகம் வந்த சைனர் அவர் வருதற்குமுன் தமிழகத்திருந்த கதைகளையெல்லாம் திருத்தித் தம் சமயத்துக்கேற்பப் புனைந்து கொண்டனர். அப் புனைவில் ஒரு சிறப்பு என்னவென்றால் கேட்பதற்கு அருவருப்பாக வுள்ளனவற்றை யெல்லாம் விருப்பாகக் கேட்கும்படி திரித்துக் கொண்டதே. அவ்வாறு கட்டிய கதையே ஆதிபகவன் என்று அவர்கள் கூறும் விருஷபதேவர் கதையும். வடநாட்டுக் கதைகளாகிய இராமாயண பாரதங்களையும் தம் சமயத்துக்கேற்பத் திரித்துக் கொண்டார்கள். வான்மீகி இராமாயணத்தைக் கம்பர் தம் நாட்டுக்கேற்பத் திரித்துக் கொண்டார் சிலவிடங்களில். அதுபோலவே சைனர்களும் திரித்துக் கொண்டார்கள். ஐவருக்கும் மனைவியென்ற திரௌபதியை அவ்வாறு கொள்வது நன்று அன்று என்று அர்ச்சுனன் ஒருவனுக்கே மனைவியாக்கிக் கதையைத் திரித்துக் கொண்டார்கள். எனவே கதையைத் திரித்துக் கொள்வதில் தேர்ந்தவர் சைனர்.

(6) பிற சமயநூல்களில் கடவுள் இவ்வுலகை ஏன் படைத்தார்? எங்கிருந்து படைத்தார்? என்பனபோன்ற கேள்விகளுக்கு

விடையில்லை என்று எழுதுகிறார். பிற சமய நூல்களைப் படித்துப் பார்க்கட்டும், விடை தெரியும். சைவ சாத்திரங்களைக் கற்றால் தெளிவாக விடை காணலாம். சாத்திர நூல்களையும் கதை கூறும் நூல்களையும் ஒன்றாகக் கருதாமல் சாத்திரங்களையும் அவற்றை விளக்க எழுந்த கதைகளையும் நன்கு படித்துப் பார்த்தால் விடை தெரியும். பார்க்க.

(7) இனி மேற்கோள் காட்டியதுபற்றிக் காண்போம். திருக்குறளைத் தம் சமயச் சான்றோர்கள் எவ்வாறு புகழ்கிறார்கள்—போற்றுகிறார்கள் என்பதற்குத் தோலாமொழித் தேவர் கூறிய "புகழ்ச்சி நூல்" என்பதையும், சமய திவாகர முனிவர் கூறிய "எம்மோத்து" என்பதையும் காட்டித் திருக்குறள் சைன சமயத்தைச் சார்ந்தவராகிய திருவள்ளுவர் இயற்றிய நூல் என்று கூறாமல் கூறுகிறார்கள். திருக்குறளையும் திருவள்ளுவரையும் போற்றாத சான்றோர் சமயப் பெரியார்கள் இல்லை. வீர சைவ சமயத்தவராகிய துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தமது திருவெங்கைக் கலம்பகத்தில் வள்ளுவரை, "என்னடிகள்" என்று கூறுகிறார். திருக்குறளைச் "செஞ்சொற் பொருள்" என்று நால்வர் நான்மணி மாலையில் கூறுகின்றார். திருவள்ளுவரை வீரசைவர் என்பாரும் உளர். எனவே தம் சமயச் சான்றோர் புகழ்ச்சியைக் கொண்டு வலியுறுத்தல் வேண்டுவதில்லை.

திரு. வி. க. அவர்களின் பாக்களை மேற்கோள் காட்டிப் பெருமையுறுதல் பொருந்துவதே. என்றாலும் திரு. வி. க. அவர்களை நன்கு உணர்தல் வேண்டும். அறவோர் பட்டியலில் விருஷபதேவர், புத்தர், கிறிஸ்து, சோக்ரதர், இராமலிங்க அடிகள், தாயுமானவர், காந்தி முதலியவர்களைக் கூறினர் திரு. வி. க. அவர்கள். தம் சீடர்களுக்கு மீன் துண்டங்களைப் பகிர்ந்த கிறிஸ்துவை அறவோர் பட்டியலில் ஆசிரியர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்களோ? அருக சமயத்தில் கண்ட நல்லனவற்றை மதித்து "அருகன் அருகே" முதலிய நூல்களை யியற்றிய திரு. வி. க. அவர்கள் கிறிஸ்துவையும் போற்றியதை உணர வேண்டும். அன்றியும் சைவ சமயத்தை விட்டு மாறிவிடவில்லை யென்பதையும் மறக்கக் கூடாது. சைவ சித்தாந்த மகாசமாஜ மாநாடுகளில் கலவாமல் இருக்கவில்லை அவர்கள்.

(8) "ஐந்தவித்தா னாற்றல் அகல்விசும்பு ளார்கோமான், இந்திரனே சாலும் கரி." என்ற குறளில் ஐந்தவித்தான் என்பது விருஷபதேவரைக் குறிக்கும் என்றும் அவரை ஆயிரம்கண் கொண்டு வழிபட்டுப் போற்றியதையே 'இந்திரன்கரி' என்பது குறிக்கும் என்றும் எழுதினர் அவ்வாசிரியர். தம் சமண சமயத்

துக்கேற்ப எழுதிக்கொண்டார்; எழுதிக் கொள்க. ஆனால், "இந்திரன் கௌதமுனிவரின் மனைவியைக் கற்பழித்ததன் காரணமாக அம்முனிவரின் சாபத்திற்குள்ளாகி உடலெல்லாம் சொல்லொணுக் குறிகளை யுடையவனானான் என வைதிக சமய நூல்கள் கூறுகின்றன. இக்கொள்கையைப் பரிமேலழகரும் தற்கால உரையாசிரியர் சிலரும் ஏற்றுக் கொண்டுள்ளது வருந்தத் தக்க செய்தியாகும்.'' (பக். கரு) என்றெழுதியுள்ளமை மிகப் பெருந் தவறாகும். பரிமேலழகர் ஆயிரங் கண்ணுடைய இந் திரனை எந்தவிடத்தில் (குறளில்) குறித்துள்ளார்? "ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து, வேந்தனும் வேந்து கெடும்'' என்ற குறளின் விசேடத்தில் இந்திரபதவி யடைந்த நகுடன் கதையைக் குறிப்பிட்டுள்ளாரேயன்றி அக்கதையை யாண்டும் குறிப்பிடவில்லை. ஆசிரியர் அவர்கள் எழுதியது எவ்வளவு பெரும் பிழை!

மேற்குறளுக்கு எந்தவகையிலும் புராணக் கதைதான் கூறியாக வேண்டும். கதையில் நல்லகதை கெட்டகதை என்று பாகுபாடு படுத்திக் கூறுவானேன்? கதை கதைதானே? ஐந்த விந்தானாற்றலுக்குச் சமணநூற் கதையைவிட வைதிகநூற் கதை மிகப் பொருத்தமே. இந்திரன் பற்றிய ஓவியத்தைக் காணும் போது ஆயிரம் கண்ணுடைய ஓவியமாயின் ஐந்தவித்தானாற்றல் நினைவுக்கு வரும். சமணக் கதையாயின் இந்திரனின் விருப்பம் என்பது விளங்குமேயன்றி (வைதிகக் கதைக்கேற்ப) ஐந்தவித் தான் ஆற்றல் விளங்காது. ஆயிரம் கண்களும் ஐந்தவித்தான் ஆற்றலால் வாராமல் இந்திரனின் வைக்கிரமசரீரத்தின் ஆற்றலால் வந்தன என்பதை ஆசிரியரே கூறினர். (பக். கச) எனவே வைதிகநூற் கதையே சாலச் சிறந்தது. இந்திரர் பலர் என்பது வைதிக நூல்களில் வருவது. அவருள் நகுடனும் ஒருவன். அவன் கதையை மேற்குறளுக்குக் கொள்வதில் யாதோர் அரு வருப்பும் இராது. பரிமேலழகர் நகுடன் கதையையே மனதில் கொண்டவராகலாம்.

இதுகாறும் "திருவள்ளுவர் வாழ்த்தும் ஆதிபகவன்'' என்ற நூலில் கண்ட கருத்துக்கள் பொருத்தம் இல்லை என்ப தையே எழுதினோம். எம் முடிபாக ஒன்றும் எழுதவில்லை. ஆதிபகவனைப்பற்றி யென்பதைக் கூறிக் கொள்கின்றோம்.

தென்னிந்திய தமிழ்ச்சங்கம், திருநெல்வேலி

தமிழ்ப்புலவர் மாணவர் தேர்வு

1960 தைத் திங்களில் சென்னை மாநிலத்திலுள்ள பல புலவர் கல்லூரிகளிலும், தனிப்பட்ட முறையிலும் சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் பட்டத் தேர்வு வகைக்குப் பயின்று விண்ணப்பிக்கும் மாணவர்களை ஊக்கும் வகையில் 1951 முதல் இச் சங்கத்தார் நடத்தி வரும் தமிழ்ப்புலவர் மாணவர் தேர்வில் இவ்யாண்டு,

	விண்ணப்பித்தவர்	எழுதியவர்	தேறியவர்
வித்துவான் புகுமுகம்	10	6	4
,, முதனிலை	83	62	57
,, இறுதிநிலை	51	39	39

இவர்களில் ஒவ்வொரு வகுப்பிலும் முதற்றகுதியில் தேர்ந்த முதல் மூவருக்கும் ரொக்கப் பரிசுகள் குறித்தபடி வழங்கப் பெறும். இவர்களுக்கும் மற்றும் தேர்ந்தவர்களுக்கும் தகுதித் தாள்கள் வழங்கப்பெறும்.

வித்துவான் புகுமுகம்

291. பெ. வத்சலாபாய், திருவள்ளுவர் செந்தமிழ்ப்புலவர் கல்லூரி, திருநெல்வேலி, **முதற் பரிசு ரூ.** 20.

293. இரா. மகாலட்சுமி ,, **2-ஆம் பரிசு ரூ.** 15.

298. நா. இராமாத்தாள், சாந்தலிங்க அடிகள் கல்லூரி, பேரூர், **3-ஆம் பரிசு ரூ.** 10.

வித்துவான் முதனிலை

552. செ. பூவராஜ், அரசர் கல்லூரி, திருவையாறு, **முதற் பரிசு ரூ.** 40.

514. P. நடேசன், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள், **2-ஆம் பரிசு ரூ.** 30.

546. R. நாகராசன், அரசர் கல்லூரி, திருவையாறு, **3-ஆம் பரிசு ரூ.** 20.

வித்துவான் இறுதிநிலை

337. V. M. சம்பந்தன், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள், **முதற் பரிசு ரூ.** 50.

349. சிங்காரவேலன், சாந்தலிங்க அடிகள் கல்லூரி, பேரூர். **2-ஆம் பரிசு ரூ.** 35.

344. மாணிக்ககணபதி, K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள், **3-ஆம் பரிசு ரூ.** 25.

புகுமுகம்

மூன்றாந்தகுதி

296. முகம்மதுஜக்கிரியா, அரசர் கல்லூரி, திருவையாறு.

முதனிலை

இரண்டாந்தகுதி

559. த. பாலசுந்தரம், அரசர் கல்லூரி, திருவையாறு.
518. குருசாமி, K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
545. மு. பிச்சுமணி, அரசர் கல்லூரி, திருவையாறு.
525. கா. ச. அப்பாவு, சாந்தலிங்க அடிகள் கல்லூரி, பேரூர்.
523. V. நடேசன், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
517. R. கேசவன், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
519. மன்னர்மன்னன், ,, ,,
585. S. இராசமாணிக்கம், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
513. P. சங்கரலிங்கம், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
58. தி. சீனிவாசன், அரசர் கல்லூரி, திருவையாறு.
86. இராமானுசம், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
62. அரங்கசாமி, கரந்தைப் புலவர் கல்லூரி, கரந்தை.
557. அ. சு. இராமலிங்கம், அரசர் கல்லூரி, திருவையாறு.

மூன்றாந்தகுதி

535. நஞ்சன், சாந்தலிங்க அடிகள் கல்லூரி, பேரூர்.
584. நெடுஞ்செழியன், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
579. காசிராசன், ,, ,,
581. S. R. மணி, ,, ,,
522. A. கிருஷ்ணன், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
516. சபாநாயகம், ,, ,,
561. குழந்தைசாமி, கரந்தைப் புலவர் கல்லூரி, கரந்தை.
582. மாணிக்கவாசகம், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
512. இராமசாமி, K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
544. துரையன், அரசர் கல்லூரி, திருவையாறு.
527. கொ. செங்கோடையன், சாந்தலிங்க அடிகள் கல்லூரி, பேரூர்.
591. சுயம்பு, பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
511. K. செட்டிஐயா, K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
551. சந்தானசவரிமுத்து, அரசர் கல்லூரி, திருவையாறு.
567. சையதுகுசைன்மகதூம், திருவள்ளுவர் செந்தமிழ்ப்புலவர் கல்லூரி, திருநெல்வேலி.
564. R. சபாபதி, கரந்தைப்புலவர் கல்லூரி, கரந்தை.
521. சுப்புராசு, K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.

547. V. K. ஆறுமுகம், அரசர் கல்லூரி, திருவையாறு.
550. செ. கருப்பையன், ,, ,,
541. பழனியம்மாள், சாந்தலிங்க அடிகள் கல்லூரி, பேரூர்.
573. பாலசுப்பிரமணியன், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
515. S. ராதாகிருஷ்ணன், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
592. வத்சலா, பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
565. நேசம்மாள், திருவள்ளுவர் செந்தமிழ்ப்புலவர் கல்லூரி, திருநெல்வேலி.
520. G. தண்டபாணி, K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
539. பா. நா. அரங்கநாயகி, சாந்தலிங்க அடிகள் கல்லூரி, பேரூர்.
549. மா. வை. சீனிவாசன், அரசர் கல்லூரி, திருவையாறு.
534. கு. சபாநாதன், சாந்தலிங்க அடிகள் கல்லூரி, பேரூர்.
542. கி. இராமதிலகம், ,, ,,
529. ந. பழனிசாமி, ,, ,,
540. S. மரகதம், ,, ,,
526. அ. சாமியப்பன், ,, ,,
590. சுவாமிநாதன், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
583. முத்தையன், ,, ,,
566. செண்பகவல்லி, திருவள்ளுவர் செந்தமிழ்ப்புலவர் கல்லூரி, திருநெல்வேலி.
587. இரங்கசாமி, பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
574. R. பாலசுப்பிரமணியன், ,, ,,
556. பா. சுப்பராயன், அரசர் கல்லூரி, திருவையாறு.
532. ந. மாணிக்கம், சாந்தலிங்க அடிகள் கல்லூரி, பேரூர்.
538. கோ. ந. அங்கயற்கண்ணி, ,, ,,
536. ந. இரா. இராமசாமி, ,, ,,

இறுதிநிலை

முதற்றகுதி

336. N. மாரிமுத்து, K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
333. M. வைத்தியநாதன், ,, ,,
340. N. கோபால். ,, ,,
343. நாராயணசாமி, ,, ,,
339. வேங்கடாசலம், ,, ,,
374. திருஞானசம்பந்தம், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
371. ப. நீலா, ,, ,,

இரண்டாந்தகுதி

338. G. சிவலிங்கம், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
367. வி. காந்திமதி, திருவள்ளுவர் செந்தமிழ்ப்புலவர் கல்லூரி, திருநெல்வேலி.

359. ந. கு. அப்பாச்சி, அரசர் கல்லூரி, திருவையாறு.
354. இரா. கதிரேசன், ,, ,,
366. P. S. கிருட்டிணமூர்த்தி, கரந்தைப் புலவர் கல்லூரி, கரந்தை.
335. S. கலியமூர்த்தி, K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
334. P. S. கலியமூர்த்தி, ,, ,,
341. குந்தாலலிங்கம், ,, ,,
373. அரங்கராமானுஜம், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
365. A. பாலன், கரந்தைப் புலவர் கல்லூரி, கரந்தை.
348. பார்த்தசாரதி, K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
346. வேங்கடாசலம், ,, ,,
376. மகாலிங்கம், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
379. மணி, ,, ,,
355. மு. வேங்கடேசன், அரசர் கல்லூரி, திருவையாறு.
378. முத்துக்குமாரசாமி, பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

மூன்றாந்தகுதி

372. சௌந்தரராசன், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
377. கல்யாணராமன், ,, ,,
345. K. B. சுப்பிரமணியன், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
347. G. திருஞானசம்பந்தன், ,, ,,
368. சோசப் சுந்தரராஜ், திருவள்ளுவர் செந்தமிழ்ப்புலவர் கல்லூரி, திருநெல்வேலி.
369. K. தமயந்தி, ,, ,,
357. மா. நா. நெல்லையப்பன், அரசர் கல்லூரி, திருவையாறு.
361. கை. பிச்சைப் பிள்ளை, ,, ,,
363. V. சக்காராம், கரந்தைப் புலவர் கல்லூரி, கரந்தை.
362. T. சாமிநாதன், ,, ,,
381. இராமலிங்கம், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
380. பாலகிருஷ்ணன், ,, ,,
375. இரத்தினசபாபதி, ,, ,,

நெல்லை
4-4-60

பு. சி. புன்னைவனநாதன்,
புலவர்குழுத் தலைவர்.

ஆனங்கூர் அகத்தீச்சுரர் கல்வெட்டுக்கள்

[வித்துவான், இரகுபதி பாலசுப்பிரமணியன்.]

ஆனங்கூர் என்னும் சிற்றூர், தஞ்சை மாவட்டம் மாயூரம் வட்டத்தில், திருத்துருத்தி என்னும் தேவாரம் பெற்ற தலமாகிய குற்றாலத்துக்குத் தெற்கே சுமார் மூன்றுகல் தூரத்திலுள்ள தாகும். இவ்வூரின்கண் உள்ள திருக்கோயிலுக்கு 'அகத்தீச்சுரம்' என்று பெயர். (ஈச்சரம் - கோயில்) அகத்தீச்சரம் என்றால் அகத்தியரால் பூசிக்கப்பெற்ற கோயில் என்பது பொருள். இது, மழவர்கோன் மகளாகிய செம்பியன் மாதேவியாரால் கட்டப் பெற்ற கருங்கற்கோயிலாகும். கோடை விடுமுறையில் குற்றா லத்திலுள்ள என் உறவினர் வீட்டிற்குச் சென்றிருந்தபோது, ஒருநாள் ஆனங்கூர் செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. அது பொழுது அக் கோயில் கல்வெட்டைப் படிக்கும் பேறுபெற்றேன். இக் கல்வெட்டு இதுவரை தென் இந்தியக் கல்வெட்டுத் தொகுதி யில் வெளியிடப் பெறாமையால், ஆராய்ச்சியாளர்க்குப் பயன் படுமென்று கருதி நற்றமிழ் நங்கையாம் செந்தமிழ்ச் செல்வியில் வெளியிடுகின்றேன். கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ள இடமா வது, கரு இல்லில் வடபுறச் சுவராகும்.

கல்வெட்டு

வரி - 1 : ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் கோனே ரின்மை கொண்டான் செயங்கொண்ட சோழவளநாட்டு ஆனங்கூர் திருக்கற்றளி மகாதேவர் கோயில் தேவகன்மிக்கும் மாகேசுரக் கண்காணி செய்வார்க்கும் ஸ்ரீகாரியம் செய்வானுக்கும் திரு நாமத்துக் காணியும் தேவதான இறையிலியும்.

வரி - 2 : ஆன இந்நாட்டு வெள்ளை விநாயக மங்கலம் நிலம் அஞ்சரையே ஒருமாவரையே அரைக்காணி முந்திரிகைக் கீழரையே ஒரு மா வரைக்கும் காவேரித் தென் குலையிலே பதினாற்கோல் . தறைபற்றிட்டு —— பதினெஞ்சாவது வரையும் செய்து வராதே இத் தேவற்கு ஈயிஈ—வது முதல் இ——ரைக் கோல் தறையாக செய்வித்துக் கொண்டு வாரா நின்றார்கள்

வரி - 3 : என்றும் இப்படியாகையாலே இவ்வூர்க்கு இரப் பறையே திரப்பின்றியே இரா நின்றதென்றும், இப்படி தவிர்க இவ்வூர்க்கு முன்பு பற்றிட்டு வருகிற இடத்து மேற்க்கடைய ஐங்கோல் தறை இவ்வூர்க்கு இப் பற்றாகவும் நீக்கி நின்ற கோலில்

பதினஞ்சாவ்து வரையும் செய்து வந்த கோலுக்கு மேலேற்றமாக செய்வித்த கோல் ஏழரையும் முன்பு செய்து

வரி - 4 : வந்த திருவழுந்தூராரே செய்யவும். நீக்கி நின்ற கோல் ஒன்பதும் முன்பு ஊர்களாய் வாணதிராயர் நிச்சயித்த படியே இட்டு இந்நாட்டு அரைசூர்க்குப் பற்ருக இடசெய்யவும் : காட்டானமைக்கு காசு தண்டும் ஆண்டுகள் இவ் வெள்ளை விநயக மங்கலத்துக்கும் இறுக்கும் காசு தவிரவும் கடவதாகப் பெற வேணுமென்று நித்திய — —

வரி - 5 : நமக்கு சொன்னமையில் இப்படிச் செய்யக் கடவதாகச் சொல்லி கணக்கிலும் இட்டுக்கொள்ளக் கடவார் களாக வரிக்கூறு செய்வார்களுக்கும் சொன்னோம். எழுதினன் திருமந்திர ஓலை இராச நாராயண மூவேந்த வேளான் எழுத்து. இவை வில்லவராயன் எழுத்தென்றும், இவை விழிஞ்த் தரையன் எழுத்தென்றும்— —

வரி - 6 : ராயன் எழுத்தென்றும் இவை வேணாட்டரையன் எழுத்தென்றும் இவை காடவராயன் எழுத்தென்றும் இவை — — எழுத்தென்றும், இவை காடவன் நாராயணன் எழுத்தென்றும், இவை மூவேந்தராயன் எழுத்தென்றும், இவை தொண்டமான் எழுத்தென்றும் யாண்டு முப்பத்து நாலாவது நாள் நூற்று எண்பத்து ஆறினல் பிரஸாதஞ் செய்தருளிய திருமுகப்படி. இது பன்மாகேஸ்வர ரக்ஷை.

அறிவீரே!

[வெண்பாவூர், பொ. திருஞானம்]

மறைகள் நுவலும் கருத்தினையே
மக்கள் அதனை அறியாமல்
குறைகள் சொல்லித் திரிவதனல்
குவலயம் நன்கு சிறந்திடுமோ?
முறையால் இறைவனை வணங்கிடவே
முத்தி நிலைக்கு வித்ததனல்
நிறையருள் பெற்றே உலகதனில்
நெடிது வாழ அறிவீரே!

செந்திலாண்டவன்

செய்தருளுஞ் சிறப்புந் திருவருள்

[சித்தாந்த பண்டிதர், ப. இராமநாத பிள்ளை.]

தெய்வ நாட்டமுடைய நல்லன்பர்களுக்கு இறைவன் எந்நாளும் முன்னின்று சிறப்பித்துத் திருவருள் புரிந்து வருகின்றனன். இத்தகைய நாட்டமுடையவர் பள்ளியின்கண் ஆசானைச் சார்ந்த மாணவரொப்பர். தெய்வ நாட்டமில்லாதவர் தெருவில் திரிந்தலையும் கல்லாமாந்தரையொப்பர். சார்ந்தாரைக் காத்தலன்றோ தலைவர் கடனாவது !

இம்முறையில் செந்திலாண்டவனின் திருவடி நாட்டமிக்க மெய்யன்புப் பெரியார் மதுரை 'மாரியப்பசாமிக'ளாவர். அவர்கள் முருகன் திருவருளால் முத்தமிழ் வல்லாராய்த் திகழ்கின்றனர். அவ்வடிகளாரின் திருவரலாறு நம்மனோர்க்குப் பெருந்துணையாக நின்று நல்வழி காட்டும். அவர்கள் திருவருளின் மாட்டு உலையா நெஞ்சத்துறுதி மிக்கவர். அவ்வுறுதிப்பாட்டினால் திருவருள் தோன்றாத் துணையாக நின்று ஆட்கொண்ட அன்றுதொட்டு இன்றுகாறும் அவ்வப்போது அகத்தும் புறத்தும் செய்துபோதரும் அருளிப்பாடுகள் அளப்பில. அவற்றைப் பிறர்பிறர் வாயிலாகக் கேட்டுணர்வதன்றி அடிகள் வாயிலாகக் கேட்டுணர்வதும் அருமை. இம்முறை காரைக்காலம்மையார் தமக்குக் கிடைத்த திருவருள் வெளிப்பாட்டினை 'விளம்புந்திற மன்று' என உரைசெய்ய அஞ்சியதோடொக்கும். எனினும் அவ்வம்மையார் பிறர்பொருட்டு வெளியிட்டமை போன்று அடிகளாரும் உளங்கனிந்து ஒருசில கூறியுள்ளார்கள் உலகோர் பொருட்டு. அவை வருமாறு :

பிறப்பு

'பாண்டி நாடே பழம்பதி' யெனவும், 'தென்பாண்டி நாடே சிவலோகம்' எனவும், 'தென்னாடுடைய சிவனே' எனவும் சிறப்பித்துச் சொல்லப்படும் தென்பாண்டி நாட்டில் மதுரைமாநகர்க்கண் புதுக்குயவர் பாளையத்தில் வேட்கோவர் குலத்தில் பூச்சன் செட்டியாரென்னும் தெய்வ நாட்டமிக்க பெரியாரொருவர் வாழ்ந்திருந்தனர். அவர் தங்குலத் தொழிலாம் மட்பாண்டஞ் செய்யுந் தொழிலை மேற்கொண்டிருந்தனர். இவர் தந்தையார் வாழவந்தான் செட்டியாராவர். இவர்கள் தெலுங்கினைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள். இவர்கள்தம் குலதெய்வம் வாழ

வந்த அம்மன். மண்டல மாணிக்கம், இவர்கள் கோத்திரம். இது தெலுங்குக் கோத்திரம் தொண்ணூற்றினுள் ஒன்று. இவர்தம் கால்வழியினராய நம் பூச்சன் செட்டியாரவர்கட்குத் தக்க பருவத்துப் பொருந்திய கோத்திரத்து 'அலர்மேலு' என்னும் நலமாா் நங்கை ஒருத்தியை மணம் முடிப்பித்தனர். எளிய வாழ்க்கையாக வாழ்ந்து வந்தனர். பூச்சன் செட்டியாரின் தந்தை வழி முன்னோர்கள் இராமநாதபுரம் மாவட்டம் கமுதிப் பக்கமிருந்து வந்தவர்கள்.

நம் அடிகளாருக்குமுன் அவர்தம் தாய்தந்தையர்க்கு இரண்டு பிள்ளைகள் பிறந்து இறந்துவிட்டன. அதனால் அவ் வம்மையார் மிகவும் மனம் வருந்தியவராய் வண்டியூர்த் தெப்பக் குளத்து மாரியம்மன் கோவிலுக்கு அடுத்தடுத்துச் சென்று வழிபாடு புரிந்து பிள்ளைவரம் வேண்டி வருவாராயினர். அம்மை யின் திருவருளால் சுபகிருது ஆண்டு (1902) ஆனித் திங்கள் எட்டாம் நாள் நம் அடிகளார் பிறந்தனர். இப்பொழுது அடிக ளாருக்கு அகவை ஐம்பத்தெட்டு. அடிகளாருக்கு அம்மையின் திருப்பெயரையே சூட்டினர். அதுவே 'மாரியப்பன்' என்ப தாகும். அம்மையின் வரத்தால் பிறந்து அம்மையின் பெயர் சூட்டப் பெற்றமைக்கு அடிகளாருக்கு முற்றவப் பேறுண்டென் பது தெளிவு. 'தவமும் தவமுடையார்க்'கன்றோ ஆவது. அம்மையின் அருந்துணை அடிகளார்க்கு நின்று நிலவுகின்றது. அடிகளார்க்கு 'மாரியம்மனின்' துணையுண்டென்பது அவர்தம் தாயார் மொழிந்த அருமறையாகும். அடிகளாரும் அம்மை யாரை அந்நாள் தொட்டு வழிபட்டு வருகின்றனர். அடிகளார் மூன்றாவது பிள்ளையென்பதும் முன்னிரண்டு பிள்ளைகளும் இறந்துவிட்டனர் என்பதும் காட்டும் அறிகுறியாக அடிகளா ருக்கு மூக்குப் பூரியிருப்பது காணலாம்.

கல்வி

திருவருளால் நிறைவுறுங்கல்விக்கு முன் உலகியன் முறைப் படி கல்விகற்கும் வாய்ப்பு அரிதாவது இயல்பு போலும். நம் அடிகளாரை அவர்தம் பெற்றோர் பள்ளிக்கு வைத்தல் வேண்டும் என்னும் எண்ணமுங் கொண்டிலர். அகவை எட்டுவரையும் அடிகளார் எந்தப் பள்ளிக்கூடத்தும் சென்றதில்லை. விளையாட் டுப் பிள்ளைகளுடன் ஆடிப் பாடிப் பொழுது போக்குவாராயினர்.

மதுரையில் மகமதியப் பெரியாரொருவர் ஊர்காவற்றுறை யில் வேலை பார்த்து விடுதி பெற்றனர். அவர்க்கு விடுதி யூதிய மாக வருந்தொகை ரூபா 6. இத்துடன் மதுரைப் புகைவண்டி நிலையத்தில் தென்பால் மட்டக்கடப்பு வாயிற்காவலராகவும்

அலுவல் பார்த்து வந்தனர். அதற்காக அவருக்கு வரும் மாசப் படி ரூபா 7 ஆகும். சமயக் கோட்பாட்டில் மிக்க அழுத்த முடையவர். தெய்வ நாட்டமிக்கவர். பொதுமைப் பண்புடையவர். அவர்கள் புகைவண்டிக் காவல் வேலையுடன், சில பிள்ளைகளுக்குச் செந்தமிழ்க் கல்வி கற்பித்து வந்தனர். அப்பிள்ளைகளுடன் சேர்ந்து நம் அடிகளாரும் சில திங்கள் கற்றனர். ஆசிரியர் மருத்துவத் தொழிலிலும் வல்லவர். மருத்துவத் தொழிலை நன்கொடையாகவே செய்து வந்தனர். மருந்துக்கு வேண்டும் மூலிகைகளைக் காவல் வாயிலுக்கு அண்மையில் ஒரு சிறு தோட்டம் அமைத்து வளர்த்து வந்தனர். அவைகட்குத் தண்ணீர் வார்க்க வேண்டியதும் மாணவர்களின் வேலையாகும். அவ்வாசிரியர் சமயப் பொதுநோக்க முடையவரென்பது அவர் மாணவர்களுக்கு அவ்வப்போது கூறும் அறிவுரைகளான் உணரலாம் அவை வருமாறு: சைவ மாணவர்களிடம் திருவெண்ணீறு பூசி வருதல் வேண்டுமெனவும், திருவெண்ணீறணியுங்கால் "அல்லல் போம் வல்வினை போம்" எனத் தொடங்கும் செந்தமிழ்ப் பாட்டை ஓதுதல் வேண்டும் எனவும் உரைப்பர். வைணவ மாணவரிடையே நாமம் போட்டுக்கொண்டு வருக எனவும், கிறித்துவ மாணவரிடையே சிலுவை அணிந்து கொண்டு வருகவெனவும் உரைப்பர். இவர்தம் சீரிய செயலால் தக்காரொருவர் ஒரு நெறிக்குரியராக விருந்துகொண்டே ஏனைப் பல நெறியும் அதனதன் இயல்பில் வாழத் துணைபுரிதல் எளிதென்பதும் அதுவே முறைமை என்பதும் வெளிப்படுகின்றதல்லவா? அங்ஙனமாயின் திருவள்ளுவப் பெருந்தகையார் செந்நெறி யொன்றற்குரியராய் இருந்துகொண்டே எல்லா நெறிக்கும் பொருந்துமாறு பொதுப்படக் கூறுதலும் இயல்புடைத்தாம் என்பதற்கு எழுந் தடை யாது? ஏதும் இன்றென்க. மேலும் அம் முகமதிய ஆசிரியர் உலகப் பழிக்கும் அஞ்சி உலகத்துடன் ஒத்துவாழ வழிகாட்டுவார் போன்று மாணவர்களை நோக்கி நீங்கள் சமய அடையாளமின்றி யிருந்தால் துலுக்கனிடம் படிக்கப்போய்ப் பிள்ளைகள் கெட்டுவிட்டதெனப் பெற்றோரும் உலகும் சொல்லும். அப்பழிக்கு யான் ஆளாதல் கூடாது. கண்டிப்பாகச் சமய அடையாளங்களுடன் வருக எனவுங் கூறுவர்.

நம்மடிகள் இங்ஙனங் கற்றுக் கொண்டிருக்குங்கால் முற்பிறப்பின் தொடர்பால் இசையமைதியும் நாடகநோக்கமும் அவர்கட்குத் தாமே நிகழ்ந்தன. அது காரணமாக அப்பொழுதுள்ள நாடகக் கம்பெனிகளில் சிறந்ததாகிய "பரய்ஸ் கம்பெனி" யில் சேர்ந்தனர். அக்காலத்து அடிகளாருக்கு அகவை பன்னி

ரண்டு. தம் முயற்சியாலும், பணிவும் அன்புமாகிய பண்பாட்டி ஞலும் படிப்படியாக உயர்ந்து திறம்பட 'அரச' வேடம் பூண்டு நடிப்பாராயினர். அக்காலத்து அகவை பதினைந்து. அதனுல் நாடகக் கம்பெனியார்க்கும் வருவாயும், பேரும் புகழும் மிகுவ வாயின. வேறு பலரும் நம்படிகளாரை முதன்மையாகக் கொண்டு நாடகங்கள் பல நடத்திப் பொருளீட்ட முயன்றனர். முயன்று அடிகளாரையும், உடன் நடித்த சிலரையும் அழைத் துக்கொண்டு கருங்குளம் திரு. சுப்பையா பிள்ளையவர்கள் திருச் செந்தூர் வந்து சேர்ந்தனர். நாடகத்துக்கு வேண்டிய முன்னேற் பாடுகளைச் செய்தனர். கொட்டகை வேலைகள் நடந்துகொண் டிருந்தன. எனினும் பணமுடையினுல் அழைத்துக்கொண்டு வந்த அடிகள் முதலாயினுரைச் செம்மையாகப் பேணமுடியாத நிலைமை வந்தது. இதனை உணர்ந்த அடிகளார் பெரிதும் வருந் தினர். அவ்வருத்தமும் தம் பொருட்டன்று. தம்மைச் சார்ந் தவர் பொருட்டேயாம். ஒருவகையாகத் தம்மோடு உடன் வந்தவர்களுக்கு ஒழுங்குபண்ணி ஊருக்கனுப்பி வைத்தனர்.

வாழ்க்கை வெறுப்பு

ஒரு நாள் ஆழ்ந்து எண்ணியவராய்த் தாம் பிறப்பெடுத்த இவ்வுடம்பினுல் பெற்றேர்க்குப் பயன்படுமாறு ஏதுஞ் செய்ய முடியவில்லை. சார்ந்த நண்பர்க்குஞ் செய்ய முடியவில்லை. என்னே நம் வாழ்வு என வாழ்க்கையில் வெறுப்புண்டாயிற்று. பிறர்க்குப் பயன்படாத இவ்வுடலைச் சுமந்து திரிவதினும் இதனை விடுத்து இறப்பதே நன்றெனத் துணிந்தனர். திருச் செந்தூரையடுத்துள்ள அம்மன்புரத்தில் ஓர் இசக்கியம்மன் கோவிலுளது. அக் கோவிலுக்குச் சென்று, அவ்வம்மனை நோக்கி 'ஏ தாயே! உனக்கும் மாரியம்மனுக்கும் யான் வேறு பாடு காண்கிலேன் நீ பழிவாங்கும் தெய்வமாக விளங்கு கின்றுய். என் உயிரையும் பலியாக ஏற்றுக்கொள்' எனக் கூறி உயிர்விடும் நோக்கத்தில் நாக்கை நன்ருக அறுத்தெறிந்தனர். குருதி அளவுக்கு மிஞ்சிப் பாய்ந்தது. மயங்கி வீழ்ந்தனர். இதை யுணர்ந்தார் அடிகளாரைக் கொண்டுவந்து மயக்கந் தெளிவித்து மருத்துவ மனைக்குக் கொண்டுபோக முயன்றனர். அடிகளார் குறிப்பாக மருத்துவ மனைக்குக் கொண்டுபோதல் வேண்டா மெனவும், பெற்றேர்களுக்கு அறிவித்தலும் ஆகாதெனவும், தம்மைக் கொண்டுபோய்ச் செந்திலாண்டவன் திருமுன் சேர்த்து விடல் வேண்டுமெனவும் எழுதியுணர்த்தினர். அவர்களும் அங்ஙனமே செய்தனர். இந்நிகழ்வு வைகாசி விசாகத்து அண் மையில் நிகழ்ந்தது. இந்நிகழ்வு நிகழுங்கால் அடிகளாருக்கு அகவை பதினைந்து பதினுறிருக்கலாம்.

செந்திலாண்டவன் செய்த சிறப்பருள்

அடிகளாருக்கு மாரியம்மன் திருவருளும் உறுதுணையாக விருந்தது. அடிகளாருங் கடும் நோன்பினை மேற்கொண்டனர். அஃதாவது இரண்டு சிறிய துண்டன்றி வேறு ஆடை வைத்துக் கொள்வதில்லை. திருமுருகனின் திருக்கோவிலின் எல்லை கடந்து ஊருக்குள் செல்லுவதில்லை; எவரிடமும் ஏதுங் கேட்பதுவும் பெறுவதுவும் இல்லை; காலை மாலை இரண்டு வேளை முறையே கடலினும், நாழிக் கிணற்றிலும் தீர்த்தமாடுவது, பாலும் பழமு மேயுண்பது, திருவெண்ணீறணிந்து ஆறெழுத்தெண்ணி வழி படுவது, இடையறாது செந்திலாண்டவனை உள்குவது முதலிய அருந்தவச் செயல்களேயாம். முருகன் திருவருளால் திருக் கோவிலார் காலை மாலை இரண்டு வேளைகளிலும் பாலும் பழமும் கொடுத்துவந்தனர். உள்குவது - தியானிப்பது. இத்தகைய நோன்புத்தவம் ஏறத்தாழ ஒன்றேமுக்கால் ஆண்டுவரையும் நிகழ்ந்தது. நாக்கும் ஊறிப் பழைய நிலைமையை அடைந்தது.

முருகன் திருவாணை

சோறுண்ணும்படி முருகன் திருவாணை பிறப்பின் சோறுண்பதெனை அடிகள் இருந்தனர். முருகப்பெருமானும் ஒரு நாள் அடிகளார் கனவிலெழுந்தருளிச் 'சோறுண்க' எனப் பணித் தருளினர். அந்நாள் தொட்டு அடிகளார் சோறுண்ணத் தொடங்கினர். திருக்கோவிலாரே உச்சிக்காலத்துக்குப்பின் சோறும், இரவில் பாலும் பழமுங் கொடுத்து வந்தனர். இங் ஙனம் நிகழுங்கால் முருகப்பெருமான் வலிய ஆட்கொள்ளும் வள்ளல் நம் அடிகளாருக்குச் சருக்கரைப் பொங்கல் ஊட்டுவிக் கத் திருவுள்ளங் கொண்டனன். திருச்செந்தூரில் தூண்டு கைப்பிள்ளையார் திருக்கோவிலை அடுத்துள்ள கவுண்டர் திரு மடத்தில் வாழும் 'சங்கர வடிவம்மாள்' என்னுந் தவமுதியாள் கனவில் தோன்றி நம் அடிகளாருக்குச் சருக்கரைப் பொங்கல் செய்து கொடுக்குமாறு கட்டளையிட்டருளினன். அவ்வம்மை யாரும் அவ்வாறே அமைத்துக் கொடுத்தனர்.

பெற்றகடனல் பெருந்துன்பம்

அடிகளார் செந்திலாண்டவன் திருவாணைப்படி சோறுண்டு வருங்கால் சிற்சில வேளைகளில் உணவுண்ணத் தொடங்கும் போது சிலர் வந்து உணவு வேண்டி நிற்பர். அந்நேரத்து அடிக ளார் தமக்கென வந்த திருக்கோவிலுணவினைக் கொடுப்பது திருக்கோவிலார் நோக்கத்துக்கு மாறாகும். கொடாமலுண்பதும் அறத்திற்கு மாறாகும். பிறர்பால் ஒன்றைப் பெறமுயல்வது கொண்ட கொள்கைக்கு மாறாகும். இந்நிலையில் அடிகளாரின்

தூய்மையும் மேன்மையும் வாய்ந்த நல்லுள்ளம் வருந்திக் கடன் பெற்று உணவளிப்பது என்னும் முடிபிற்கு வந்தனர். அதன் மேல் திருக்கோவிலுக்கு அண்மையிலுள்ள ஒரு வெற்றிலைபாக்குக் கடையிற்சென்று அரையணாக் கடனாகப் பெற்று ஒரு கட்டிச் சோறு வாங்கி அவ்வன்பர்க்கு நல்கி மகிழ்விப்பர் இம்முறையாகப் பலகால் கடன்பெற்றுக் கடனும் ஏறுவதாயிற்று. அது பத்துத் திங்களுக்குள் பதினொரு அணாவாகப் பெருகிற்று கடன் தீர வேண்டுமே என அல்லும்பகலுங் கவல்வாராயினர். கவன்று ஆண்டவன்பால் வேண்டிக் கொண்டனர்.

ஆண்டவனும் ஒரு நாள் கடற்கரை மணன்மேல் சிறிது வெளித்தோன்றுமாறு ஒரு ரூபா நோட்டு ஒன்றினை அளித்தருளினன். அடிகளார் அதனைக் கண்டதும் ஆண்டவனைத் தொழுது மிக்க உவகையுடன் எடுத்தனர். ஓடோடியுஞ்சென்று கடைக்காரர்பாற் கொடுத்தனர். கடைக்காரரும் தாம் கணக்கு வைத்துக் கொள்ளவில்லையென்றும், கடனாகக் கொடுக்கப்பட்டதில்லை யென்றுங் கூறிப் பணிவுடன் பெற்றுக்கொள்ள மறுத்தனர். அடிகளார் தம்முள்ளக்கணக்கு உண்டென்று வற்புறுத்தித் தாம் கடனாகவே பெற்றமையால பெற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்றனர். மறுக்கமாட்டாமல் கடைக்காரரும் பெற்றுக்கொண்டு மீதமுள்ள ஐந்தணாவையுங் கொடுத்துவிட்டனர். அடிகளார் அவ்வைந்தணாவையும் பெற்றுத் திருநீற்றுப் பையினுள் வைத்து மடியில் வைத்துக் கொண்டனர். மாலைக் காலவழிபாட்டிற்குச் செல்லும்போது உள்ளுள்ள தங்கக்கொடி மரத்துமுன் அப்பையினை வைத்துவிட்டுப் போய்விட்டனர். வழிபாடு முடித்துவந்து பார்த்தபின் அப்பையினைக் காணவில்லை. குறிப்பாக இதனால் அறியக்கிடப்பது பணத்தைத் தொடுவதில்லையென்ற கொள்கைக்கு மாறாகப் பணத்தை வைத்துக் கொண்டிருத்தற்கு ஆண்டவன் இணங்கவில்லை யென்பதாம்.

காவடிச் சிறப்பு

அடிகளார் ஏறத்தாழ இரண்டாண்டு திருக்கோவிலிலேயே தங்கித் தவவாழ்க்கையினை மேற்கொண்டொழுகி வருவதைக் கண்ட பலரும் அடிகளாரது மேன்மையும், ஆண்டவன் அருளிப்பாடும் உன்னியுன்னி அடிகள்பால் மிகவும் ஈடுபாடு கொள்வாராயினர். திருச்செந்தூரிலுள்ள முக்காணியப் பார்ப்பனர் அடிகளாரைக் கொண்டு 'காவடி' செலுத்துவிக்க எண்ணினர். அன்பர் பலரின் துணைகொண்டு பொருள் தொகுத்து மிகவும் சிறப்பாக அடிகளாரைக் கொண்டு காவடி செலுத்துவித்தனர். அது வகைக்கு நேர்ந்த செலவும் ஆயிரத்தைஞ்ஞூறு ரூபாவுக்குக் கூடுதலாக விருக்கும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் தங்கல்

ஆண்டவனருள் பெற்று எவரிடமுங் கல்லாது திருவருள் உண்ணின்றுணர்த்த அவ்வப்போது அத்தெழுந் தெய்வக் கீர்த்தனைகளைத் தாமே பாடி நினைவில் வைத்திருந்து வர்ண மெட்டுகள் அமைத்து அனைவரும் வியக்குமாறு ஆங்காங்கு இசையரங்குகள் பல நிகழ்த்தி வந்தனர். அவற்றால் வரும் பொருள்களைக் கொண்டு தம் பெற்றோரைப் பேரன்புடன் பேணி வந்தனர். அம்பாசமுத்திரம், காருகுறிச்சி, பாபநாசம் முதலிய வூர்களில் தவவாழ்க்கையாகவே ஒன்பது யாண்டுகள் தங்கி வருவாராயினர். கீர்த்தனங்கள் மனத்தே தோன்றும்போதெல் லாம் பாடிக்கொண்டும், பின் நினைத்து எழுதிவைத்துக் கொண் டும் வருவாராயினர். இசையரங்குகளில் பெரும்பாலும் தம் பாட்டுக்களைப் பாடுவதையே மேற்கொண்டுவரும் அடிகள் இடை யிடையே தேவாரம் திருவாசக முதலிய திருமுறைகளையும், தாயு மானவர், பட்டினத்தார், திருவருட்பா, கிளிக்கண்ணி முதலிய பாடல்களையும் சேர்த்துப் பாடி வருவாராயினர். இயல்பாக இசைப் பெரும்புலவர்கள் தக்கவோர் ஆசானையடுத்துப் பத்துப் பன்னிரண்டு ஆண்டுகள் பணிபுரிந்து வேறு எம்முயற்சியுமின்றி அதுவே முயற்சியாகப் பயின்று திறமையுற்றாரும் திகைப் புற்று வியக்குமாறு அடிகளாருக்கு முருகப்பெருமான் திரு வருளால் சிலவாண்டுகளுக்குள் இசைப் புலமை எளிதிற் கைகூடுவதாயிற்று. நெருங்கிப் பழகும் மெய்யன்பர்கள் பலர் அடிகளார்க்குத் திருமணம் புரிவித்தல் வேண்டுமென எண்ணி னர். அடிகள்பால் இசைத்தனர். அடிகளும் ஆண்டவன் திரு வுள்ளம் பணித்தருளுமேல் அங்ஙனம் செய்துகொள்வது நலம் என விடையிறுத்தனர். திருவுள்ளத் திருக்குறிப்புணர்தற் பொருட்டு அடிகளார் அம்பாசமுத்திரத்தின்கண் நாற்பது நாள்கள் அருந்தவம் புரிந்தனர். அந்நாளில் செந்திலாண்டவன் அடிகளார் கனவில் அருந்தவமுதியாராகத் தோன்றித் திருமணம் புரிந்துகொள்ளுமாறு பணித்தருளினன். அதன்மேல் திருமண முயற்சி நிகழ்வதாயிற்று.

புதுவீடு புகுதல்

அடிகளார் திருமண முயற்சி நிகழ்வதைக் கண்டதும் மணத்திற்குமுன் வீடு ஒன்று வாங்குதல் இன்றியமையாத தெனக் கண்டனர். அதற்கு வேண்டும் பொருள் தொகுப்பான் நாடினர். ஆடிப்பிழைத்தல் ஆகாதெனக் கொண்ட அடிக ளார் இசைப்புலமையாலே பொருளீட்ட முயன்றனர். ஆங் காங்கு இசையரங்குகளும் நிகழ்ந்து பொருள் வருவாயும் பெரு கிற்று. பேரிசைப் புலவர்களுக்குக் கொடுக்கும் பெருந்தொகை

யாகிய 125 ரூபாவும் வானொலி இசையரங்கில் பெற்று வருவாராயினர். அடிகளாரின் தமிழிசைப்பாக்களுக்கு நல்ல மதிப்பு ஏற்படலாயிற்று மற்றைய இசைப்புலவர்களும் அடிகளாரின் இசைப்பாக்களை இசையரங்குகளிலும் பாடுவாராயினர். நாடகத்திற் பேர்போன 'கிட்டப்பா'வும் சில பாக்களை எழுதி வாங்கிப் பயன்படுத்திக் கொண்டனர்.

இராமலிங்க அடிகளார் படத்திலும், பூம்பாவையம்மையார் படத்திலும் வேண்டும் இசைப்பாக்களை இயற்றுபவராயும், அப்பாக்களைப் பயிற்றுபவராயும், பயிற்றுவித்தவைகளை இவ்விவ்வாறு பாடி நடிக்கவேண்டுமெனத் தூண்டித் துணைபுரிபவராயும் எல்லாவகைக்குந் தாமே ஆசானாய்த் திகழ்ந்து அப்படங்களுக்குப் பேரும் புகழும் பெருகப் பணிபுரிந்தனர். பொருளும் வந்தது. இராமலிங்க அடிகளார் படம் கல்கத்தாவிலும், பூம்பாவை அம்மையார் படம் சென்னைமாநகரிலும் எடுக்கப்பட்டன. அதனால் அடிகளாரின் இசைப்பாவும் புகழும் இவ்விரு நகரங்களிலும் பரவின. இவ்வாற்றால் ஈட்டிய பொருளைக் கொண்டு மதுரைமாநகர்க்கண் ஓர் அழகிய வீடு விலைக்கு வாங்கிக் குடி புகுவாராயினர்.

அருமறை பெறுதல்

அடிகளார் சீரலைவாயாகிய திருச்செந்தூரின்கண் இருக்கும்போது 'முருகப்பெருமான்பால் அடியேன் நினைந்துகொண்டுங் கணித்துக் கொண்டும் வரும் பெருமறையினை ஓர் ஆசான் வாயிலாகப் பெறுதல் வேண்டும்' என விண்ணப்பித்துக் கொண்டனர். அருமறை என்பது உபதேசம். திருவருளால் வற்கலை நாராயண சாமிகளின் மாணவர் இசைப்புலமையுமிக்கார் 'சுகுணானந்தகிரி சுவாமி' யவர்கள்பால் நினைந்தவண்ணமே அருமறை கேட்டுக் கொண்டனர். அம்மறை முருகனின் 'தாரகமந்திர'மாகும். திருப்பரங்குன்றத்து வீற்றிருந்து சித்துக்கள் பல புரிந்து சைவ மேன்மையினை நிலைநாட்டி மெய்யன்பர் பலர்க்கு ஆசானாய்த் திகழ்ந்த 'மாயாண்டிசாமி' யவர்களும் நம்மடிகளாருக்கோர் குருவாவர்.

பெற்றோர் பிரிவு

அடிகளாருக்கு அகவை இருபத்துமூன்று நிகழுங்கால் தந்தையார் இறையடி எய்தினர். அக்காலத்துத் தந்தையார்க்கு அகவை 87. தந்தையார் இயற்கை எய்துவதற்கு மூன்றாண்டுகளுக்கு முன் அருமைத் தாயார் இறையடி எய்தினர்.

(தொடரும்)

கவுந்தியடிகள்

[திரு. மது ச. விமலானந்தப், எம். ஏ.,]

(செல்வி சிலம்பு ௩-௪, பரல் ௮, ௩-௮௯ ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்ந்தோரும் உரைசால் பத்தினியும்

இளங்கோ காப்பியத்தை எழுதிய நோக்கே கற்பின் செல்வி கண்ணகியின் சிறப்பையும் சீர்மையையும் சித்திரிப்பதற்கன்றோ? அந்நோக்கு இனிது நிறைவேற ஒரு பெண்ணை - அதிலும் தூய மூதிய தவச் செல்வியைக் கொண்டு கண்ணகியை ஏற்றிப் போற்றச் செய்கின்றார். ஆண் ஒரு பெண்ணைப் புகழ்வதில் வியப்பில்லை; ஆனால் ஒரு பெண் இன்னொரு பெண்ணை, அதிலும் குற்றமே காணும் குணமுடைய ஒரு முதியள் - தவம் பூண்ட தவத்திறன் மிக்க ஒரு கிழவி உடனுறைந்து - துன்பத்தின்போது துணையாக அமைந்து - ஊடாடிப் பழகிப் பின்னர்ப் போற்றிப் பரவுகின்றாள் எனின் அப் பத்தினிப் பெருந்தெய்வத்தின் பெற்றியை என்னென்பது? அதிலும் எப்படிப் புகழ்கின்றார் பாருங்கள்:

“ தன் துயர் காணாத் தகைசால் பூங்கொடி
இன் துணை மகளிர்க்கு இன்றியமையாக்
‘கற்புக்கடம் பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம்’ யாம்கண் டிலமால்.”

(அடைக். ௧௪௧-௧௪௪)

மாடலன், தேவந்தி, காவற்பெண்டு, மாடலன் போன்றார் புகழ்ந்தாரெனில் அதில் சிறப்பு ஒன்றுமிராது; அவர்கள் அவளோடு பழகியவர்கள், கண்ணோட்டத்தின் காரணமாக - துன்புறும் நிலைகண்டு இரங்கிக் கண்ணகியைப் போற்றுதல் கூடும். ஆனால் கவுந்தியோ முன் பின் அறியாதவள் - குற்றம் கண்டு பொறாதவள், சிறு குற்றம் காணினும் சீற்றமுறும் தன்மையள். இதனை வம்பப் பரத்தைக்கும் வறுமொழியாளனுக்கும் விடுத்த சாபத்தினின்றும் நன்கறியலாம். கானுறை தெய்வமே கலங்குமளவிற்குத் தவவலி மிக்கவள்!

இத்தகைய கவுந்தியே (Electro-mycroscope போன்றவள் எனலாம்) குறை காணாது நிறையே கண்டு கண்ணகியின் கற்பின் சிறப்பையும், பொற்பின் பொலிவையும் போற்றுகின்றார் எனின் கண்ணகியின் பண்பு நலத்திற்கும் பலர்தொழு பத்தினித்தன்மைக்கும் வேறு சான்றென்ன வேண்டும்? உயரிய உள்ளமும் ஒன்றிய நோக்கும் கொண்ட கவுந்தியைவிட உயர்ந்தோர் வேறுளரோ?

இங்ஙனம் உலகிற்கோங்கிய ஒருமாமணியாம் கண்ணகியைச் சிறப்பிக்கவே கவுந்தியடிகளைக் காப்பியத்தில் பயன்படுத்தியுள்ளார் இளங்கோ எனும்போது எவருள்ளந்தான் இறும்பூது எய்தாது? அடைக்கலக் காதையின் பிற்பகுதியே கண்ணகியின் கற்பின் சிறப்பைக் காட்டுவதுதானே! பார்தொழு பத்தினிக்குப் பெரியதொரு சிறப்பு (Tribute) நல்கும் சிறந்த பாத்திரமாகவும், தம் சமயக் கொள்கைகளை எடுத்தியம்பும் வாயிலாகவும் அறச் செல்வியை அமைத்துள்ளார் அடிகள் என்பதும் இனிதே போதரும்.

இவ்விரு கருத்துக்களையும் இலைமறை காய்போல் இலங்கச் செய்ததில் அமைந்துவிடவில்லை அடிகள் திறம். கவுந்தியடிகள் காப்பியத்திற்குத் தேவையற்றவர் என்ற எண்ணம் எள்ளளவும் ஏற்படாவண்ணம் காப்பியத்தில் இன்றியமையாப் பாத்திரமாகப் படைத்தமையே பெரிதும் பாராட்டற்பாலது. கோவலன் கண்ணகியரை 'என் மக்கள்', 'என் பூங்கோதை' என்று கூறச் செய்தும், வழித்துணை என்ற அளவோடு நிறுத்திவிடாது காப்பியத் தலைவன் தலைவியரின் வாழ்வோடு ஒன்றிக் கலக்கச் செய்யுமாற்றான்,

"தவந்தரு சிறப்பிற் கவுந்தி சீற்றம்
நிவந்தோங்கு செங்கோல் நீள்நில வேந்தன்
போகுயிர் தாங்கப் பொறைசா லாட்டி
என்னோடு இவர்வினை யுருத்த தோவென
உண்ணா நோன்போடு உயிர்பதிப் பெயர்த்ததும்."

(நீர்ப்படைக். எக-அ௩

கூறிக் கவுந்தியைக் கதையிலே பின்னிப் பிணைத்து இரண்டறக் கலக்குமாறும் செய்த சேரன் தம்பி - தன் சீர்மையே சீர்மை. இங்ஙனம் இரண்டறக் கலக்குமாறு செய்து சமண சமயப் பிரசாரகர் கவுந்தி என்ற கருத்து எள்ளளவும் எவர் மனத்திலும் எழாது செய்து விடுகின்றார் சிலம்பாசிரியர்.

அன்றியும் வேறு எந்த இடத்திலேனும் கவுந்தியைக் காப்பியத்தில் நுழைத்திருப்பாரேல் இவ்வளவு வெற்றி பெற்றிருக்க முடியாது! கண்ணகியோடு கோவலன் மதுரைக்குச் சென்றஞான்று வழித்துணையாக அமைவதாகக் காட்டி அவர் கதையில் வந்த சுவடோ, காப்பியத்தினின்று விலகும் சுவடோ இம்மியும் தென்படாதவாறு கற்பனைத் திறமும், கவிதையாற்றலும் அமையுமாறு காப்பியத்தை நடத்திச்செல்லும் சிறப்பு சீர்மையுடைத்து. வழி நடந்து செல்லும் கால இடையீட்டிலேயே காப்பிய நிகழ்ச்சியினின்றும் சற்றே நெகிழ்ந்து சென்று (Digression) தம் சமயக்

கருத்தைக் கவுந்தியடிகள் மூலம் தெளிவு படுத்தியமையும், மாடலனை மறுத்து மொழிந்தமையும் அடிகளின் கைவண்ணத்தைக் காட்டா நிற்கும்.

பிற்பகுதியால் இளங்கோவின் நோக்கை எளிதே நிறைவேற்றுமாற்றாற் பத்தினியை ஏற்றிப் போற்றியும், இளங்கோவின் உள்ளமுணர்த்தும் ஓர் வாயிலாக - அவர்தம் சமயக் கருத்தை விளக்கும் வாயிலாகவும அமைந்தவர் கவுந்தியடிகள் என்றும; சமண சமயப் பிரசாரகர் கவுந்தி என்ற எண்ணம் எழாதவண்ணம் கண்ணகிக் கதையோடு ஒன்றிப் பிணைத்து, கண்ணகி புகழ் பாடும் புண்ணிய முதல்வியாக அமைத்து, அவர் காப்பியத்தில் நுழைந்த சுவடும், காப்பியத்தினின்று நீங்கிய சுவடுதானும் தோன்றாது கற்பனைத் திறத்தாலும் கவிதை யாற்றலாலும் காப்பியத்தைக் கொண்டு செல்கின்றார் சிலம்பாசிரியர் என்றும் கண்டோம்.

இதுகாறும் இக்கட்டுரையால் கண்டவற்றின் பிண்டப் பிழிவு: தவத்திறனும் பண்பு நலனும் மிக்க தவச்செல்வி கவுந்தியடிகள் என்றும், அவரால் காப்பியம் பெறும் சிறப்பும் சீர்மையும் இன்னதென்றும், கற்பனைப் படைப்பன்று - காப்பியத்திற்கு இன்றியமையாப் பாத்திரமே கவுந்தியடிகள் என்றும், இப்புண்ணிய முதல்வியால் பெருங்காப்பியத்தின் அவலச்சுவை அதிகப் படுத்தப்பட்டுள்ளது - அதன் கண்ணேதான் காப்பிய ஆசிரியரின் கைவண்ணமும் காணக்கிடக்கின்றது என்றும் தெளிந்தோம்.

இறைவன் துணை

[நாஞ்சில், கா. கணபதி]

வையம் முழுதும் ஆண்டாலும்
வாழ்வில் முழுமை கண்டாலும்
ஐயம் அறவே அகன்றாலும்
ஆராக் காதல் துய்த்தாலும்
செய்ய நெறிகள் சென்றாலும்
செழுமை யறங்கள் புரிந்தாலும்
ஐயன் இறைவன் துணையன்றி
அனைத்துப் பயனென் றிலையேகாண்!

அடைக்கலப் பத்து

[நல்லைக்கவி இளங்கோவன்]

கண்ணேயென் கண்மணியே கண்மணியிற் பாப்பாவே
பெண்ணேயென் பேராசைப் பெட்டகமே நின்னுடைய
தண்ணாரும் அருட்கடலில் தமியேனை யாடவிடு
பண்ணாரப் பாடுகின்ற பத்தனுன்றன் அடைக்கலமே! (க)

ஊனாகி உயிராகி உயிர்க்குயிரு மாகிவருந்
தேனாகித் தெவிட்டாத தெள்ளமுத வெள்ளமுமாய்
ஆனாத அருட்கடலு மாகிவருந் தமிழணங்கே
தானாக வந்தடைந்தேன் தாசனுன் அடைக்கலமே! (உ)

சோறாகிச் சுகமாகிச் சுவைமிகுந்த மதுப்பாயும்
ஆறாகி யதுநிறையும் அருட்கடலு மாகிநின்று
வேறாகி நின்றேனை விழைந்திழுத்துக் குளிப்பாட்டிச்
சீராக வைத்தவளே சிறியேனுன் அடைக்கலமே! (ங)

எண்ணாத எண்ணங்கள் எண்ணியிடர்ப் பட்டேனைப்
புண்ணாக மனங்கெடுத்துப் புலம்பியழு திருந்தேனை
உண்ணாத பாலூட்டி உளந்தழையச் செய்தவளே
கண்ணாரக் கண்டுவந்த காதலனுன் அடைக்கலமே! (ச)

உள்ளமெனும் கோவிலிலே ஒருகுடியா யுள்ளவளே
கள்ளமெலாம் போக்குவித்த காதலியே காவியமே
தள்ளியெனைத் தட்டாமல் தான்தழுவ வந்தவளே
அள்ளியணைத் திடுவென்னை அடியேனுன் அடைக்கலமே! (ரு)

துன்பங்கள் நீக்கிமனத் துயரங்கள் போக்கிவிட்டு
இன்பங்கள் சேர்க்கவந்த இளங்குயிலே எழில்மயிலே
மன்புவியில் எனையாண்ட மங்கையரே மாதவியே
அன்புடனே எனைத்தழுவி ஆதரியுன் அடைக்கலமே! (சு)

மண்ணுலகில் பற்றெனக்கு மற்றெதுவு மில்லையம்மா
எண்ணுமுன்றன் பற்றல்லால் இனியதமிழ்த் தனியரசீ
வண்ணமிகு பெண்ணணங்கே வான்மதியே போன்முகத்தாய்
திண்ணமுறச் சேர்த்தணைப்பாய் சேர்ந்தேனுன் அடைக்கலமே! (எ)

சங்கமுறு மேலோர்கள் தந்தநகை யணிந்தழகு
பொங்கவரும் பூவையரே பொற்புமிகு பாவையரே
அங்கமெலாம் காட்டியெனை யணைத்தன்பு செய்தவரே
இங்குமக்கே இனியன்யான் என்றுமும் தடைக்கலமே! (அ)

இலக்கியமும் இலக்கணமும் இயலழகும் இசையழகும்
குலக்கொடியே உன்னுடைய கூத்தழகும் கண்டுவந்து
கலக்கமெலாம் போக்கிவிட்டுக் காதலினாற் கட்டுண்டேன்
விலக்காமல் அணைத்திடுநான் வேண்டுவதுன் அடைக்கலமே! (கூ)

காதலுக்குக் கண்ணுண்டோ கடையனே நானெனினும்
மோதிவிட்டேன் உன்னுடலை முத்தமிழின் நாயகியே
ஏதுமில்லை குற்றமென்மேல் எடுத்தணைத்துக் கொள்ளடியே
சாதலின்றி யுனைத்தழுவும் தமியேனுன் அடைக்கலமே! (கo)

செய்திகளும் குறிப்புக்களும்

(க) இந்தியே ஆட்சி மொழியாகும்!

இந்தியப் பாராளுமன்றக் குழு தந்துள்ள பரிந்துரையினை ஏற்றுக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாது அவர்கள், 1965 க்குப் பிறகு இந்தி மொழியே இந்தியாவின் ஆட்சி மொழியாகவும் ஆங்கிலம் துணை ஆட்சி மொழியாகவும் நீடிக்கும் எனக் கடந்த 29 4 60 இல் ஆணை பிறப்பித்துள்ளார்.

குறிப்பு: பல்வேறுபட்ட நாகரிகம், பண்பாடுகளைக் கொண்ட இவ்விந்தியத் துணைக்கண்டத்தில் இந்தி ஆட்சி மொழியாதல் எவ்வகையிலும் ஏற்புடைத்தன்று எனப் பன்னெடுங்காலமாகத் தமிழ் அறிஞர்களும், பிறமொழி அறிஞர்களும் அரசியல் அறிஞர்களும் எடுத்துக் கூறி வந்துள்ளதை நாடு நன்கறியும். அங்ஙனமெல்லாம் இருந்தும் இந்திய அரசினர் இந்தி மொழியை அரியணை யேற்ற முனைந்திருப்பது மக்களாட்சிப் பண்பாகாதது மட்டுமன்றி நாட்டுக்கு நலம் பயப்பது மாகாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

(உ) அரசியல் அலுவலகங்களில் தமிழ்

1953 ஆம் ஆண்டில் தமிழகத்தில் தமிழை ஆட்சி மொழியாக்கும் முயற்சியின் முதற்படி துவங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இவ்வாண்டு மேத்திங்கள் 2 ஆம் நாள் முதல் மாவட்ட நிலை அலுவலகங்களில் கடிதப் போக்குவரத்துக்களைத் தமிழிலேயே நடத்துவதென்று சென்னை அரசினர் முடிவு செய்துள்ளனர்.

குறிப்பு: அரசினரின் இம்முயற்சி பாராட்டற்குரியதே. இங்ஙனமே தொடர்ந்து முயன்று பிற அரசியற்றுறை அலுவலகங்களிலும் தமிழ் மணம் கமழச் செய்வார்களாக.

(ங) பல்கலைக் கழகங்களும் வட்டார மொழியும்

"இயன்ற விரைவில் பல்கலைக் கழகங்களில் அந்தந்த வட்டார மொழியிலேயே பாடங்களைப் பயிற்றுவிக்க வேண்டுமென்று மைய அரசு விரும்புகிறது." என்று 18-4-60 இல், பல்கலைக் கழகக் கொடைக் குழுவின் அறிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்துக்கு விடையிறுக்கு முகத்தான் கல்வி அமைச்சர் டாக்டர் ஸ்ரீமாலி கூறினர்.

குறிப்பு: மைய அரசினரின் இந்த நோக்கம் வரவேற்கத் தக்கதும் பாராட்டத் தக்கதுமாகும். இதனால் அந்தந்த மாநிலங்களின் தாய்மொழி வளர்ச்சியுற வழியேற்படும். எனினும் அண்மையில் இதே அரசினர் இந்தியே ஆட்சி மொழியாகும் என அறிவித்திருப்பது நாம் எதிர்பார்க்கும் நற்பயன்களைச் சிதைக்கும் அளவுக்கு முரண்பட்டதாகவும், இந்திக்கே ஏற்றம் அளிப்பதாகவும் இருப்பது வருந்தத்தக்கதே.

(ச) கல்வித்துறை இயக்குநர் கருத்துரை

"குழந்தைகள் நன்முய் வளர்ந்தால் நாட்டுக்கு நலம்; 1945 இல் 25 மாவட்டங்களடங்கிய நம் மாநிலத்தில் 1600 துவக்கப் பள்ளிகளும் 480 உயர்நிலைப் பள்ளிகளும் இருந்தன. ஆனல் இப்போது 26000

துவக்கப் பள்ளிகளும், 1200 உயர்நிலைப் பள்ளிகளும் உள. சென்னை மாநிலம் மற்ற மாநிலங்களைவிடப் பிற்போக்காக இல்லாமல் சிறந்தே விளங்குகின்றது.'' என்று அண்மையில் தஞ்சையில் நடைபெற்ற, பள்ளிச் சிறார்க்கு இலவச உடை வழங்கு விழாவொன்றில் பேசியகாலைச் சென்னைக் கல்வித்துறை இயக்குநர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் குறிப்பிட்டார்கள்.

குறிப்பு: நம் கல்வித்துறை இயக்குநரவர்கள் கல்வியைப் பரப்புவதிலும், இளஞ்சிறாரின் நலம் நாடிப் பள்ளிகளில் பகலுணவுக்கு ஏற்பாடு செய்து வருதலையும் அனைவரும் அறிவர். அத்தகையோர் ஈண்டு வழங்கியிருக்கும் கருத்துரையைக் கவனித்துப் பெற்றோர்கள் தம்மக்கட்குக் கல்வி அளிக்க அரசியலாருடன் ஒத்துழைப்பார்களாக.

(ச) மெய்யுணர்வு விழா

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் கடந்த 24-4-60 முதல் 7-5-60 முடிய டாக்டர் குருசாமி முதலியார் தொண்டைமண்டல உயர்நிலைப் பள்ளியில் மெய்யுணர்வு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. செட்டிநாட்டரசர் டாக்டர் எம் ஏ. முத்தையா செட்டியார், அமைச்சர்கள் திரு. பக்தவத்சலம், சி. சுப்பிரமணியம், தவத்திரு. குன்றக்குடியடிகளார், ஆசிரியர் இளவழகனார், கிருபானந்தவாரியார் மற்றும் பல தமிழறிஞர்கள் தலைமை தாங்கியும், பேருரை வழங்கியும் விழாவினைச் சிறப்பித்தனர்.

குறிப்பு: மெய்யுணர்வு என்னும் அரிய கருத்தை அடிப்படையாக வைத்துச் சீரிய முறையில் விழாக் கொண்டாடிய சிவனடியார் திருக்கூட்டத்தினரைப் பாராட்டுகிறோம். இதுபோன்ற விழாக்களை மேலும் பல நடத்திச் சைவம் தழைத்தோங்க அவர்கள் வழிகோலுவார்களாக.

மெய்யுணர்வு விழா என்ற பெயரில் கடந்த சில ஆண்டுகட்கு முன்னர் ஒரு விழாக் கொண்டாட நம் கழகம் முயன்றதையும் பின்னர் வேறுபல காரணங்களால் அஃது ஒத்திவைக்கப்பட்ட செய்தியையும் அன்பர்கள் அறிவர்.

(ரு) புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு

தென்காசித் தாலூகாவைச் சேர்ந்த குத்துக்கல் வலசை கிராமம் அழகர்புரத்துக்கு நேர்வடக்கே அரைக்கல் தொலைவில் புன்செய் நிலத்தில், 382 ஆண்டுகட்கு முற்பட்ட பழங்காலக் கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டிலிருந்து அதிவீரராமபாண்டியன் ஆட்சி செய்த விவரங்கள் காணக் கிடக்கின்றன.

(சு) தமிழகப் புலவர் குழு

தமிழகப் புலவர் குழு கடந்த ஏப்பிரல் திங்கள் 16, 17ஆம் நாட்களில் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா மண்டபத்தில் கூடிற்று. முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் புலவர் குழுவின் செயல் முறைகள் பற்றி விரிவுரையாற்றினர். பல்கலைக் கழகத் துணைவேந்தர் புலவர் பெருமக்கட்குப் பொற்சரிகை மாலை அணிவித்தனர். கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி பற்றிய திட்டங்கள் பல ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டன. அம்முடிவுகள் நீண்டதோர் அறிக்கையாக வெளியிடப்பட்டுள்ளது.

மதிப்புரை

"தனிப்பாடல் திரட்டு"

தொகுத்துரை ஆசிரியர் 'கலைச் செல்வி'. 'மீனாட்சி பதிப்பகம்' கீழ இராசவீதி, புதுக்கோட்டை, விலை ரூபா. 1-30. நாட்டின் நலமும், வளமும், ஒற்றுமையும், முன்னேற்றமும் நாடும் நன்மக்கள் முதற்கண் இன்றியமையாது உணர்ந்துகொள்ள வேண்டிய அரும்பெருஞ் செய்திகளுள் தலையாயது, அந்நாட்டுப் புலவர்களின் வாழ்க்கை வரலாறுகளேயாம். புலத்துறைமுற்றிய அப்புலவர் பெருமக்கள் பாடிய பாடல்களே நாட்டின் உண்மையான நிலைமையினை எடுத்துக் காட்டிப் பின்னுள்ளோர்க்கு ஊக்கமூட்டுவதாகும்.

அம்முறையிலமைந்த நூல்களே 'தனிப்பாடல் திரட்டுக்கள்.' தனிப்பாடல்களைத் தொகுத்து முன் வெளிப்படுத்தின நல்லறிஞர்களும் பலராவர். அவர்களில் பெரும்பாலோர் நாட்டில் வழங்கியனவும், ஏட்டிலுள்ளனவும் இறவாவண்ணம் காத்து வெளிப்படுத்தியுள்ளனர். கால ஆராய்ச்சி முதலியன செய்து செவ்வைப்படுத்தி வெளியிட அக்காலத்து இப்பொழுது கிடைத்துள்ளமை போன்ற வாய்ப்புக்கள் அவர்களுக்குக் கிடைத்தில.

இத்தொகுப்புரையாசிரியர் வரலாறு, கல்லெழுத்து, முடிமன்னர், குறுநிலமன்னர், பெருநிலக்கிழார், புரவலர், பெருங்குடி மக்கள், வள்ளல்கள் முதலியோர்களின் செய்திகளாகிய புறச் சான்றுகளையும், புலவர் பாடல்களில் காணப்படும் அகச்சான்றுகளையும் நன்காய்ந்து ஒப்புநோக்கிக் காலவரையறையோடு வரன்முறைப்படுத்திச் செவ்வையுற அமைத்துள்ளார். ஒட்டக்கூத்தரும் புகழேந்தியாரும் ஒரு காலத்தவரல்லரெனவும், அவ்வையார் பலரெனவும் விளக்கியுள்ளார். திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் ஆன்றவிந்தடங்கிய கொள்கையினையும், புலமை மாண்பினையும் மாணவர்ப் பேணிய வண்மையினையும் விரித்துரைத்துள்ளனர்.

இதன்கண் முப்பத்தொரு பெரும்புலவர்களின் வரலாறுகளும் பாடல்களும் காணப்படுகின்றன. பாடல்களுக்கு வேண்டுமிடத்துச் சொற்பொருள், கருத்து, பொழிப்பு, விளக்கம் முதலியன திட்ப நுட்ப ஒட்பமுற வரைந்துள்ளார்கள். 'பல்சுவைப் பகுதி,' என்னும் தலைப்பில் ஒழுகலாற்றுக்கு வேண்டும் சிறந்த பாடல்கள் சில காணப்படுகின்றன. அவை வாழ்க்கைக்கு வழிகாட்டுவன. எளிய இனிய ஆற்றொழுக்கு நடை. இந்நூலினைச் செந்தமிழ்ச் செல்வர்களும் ஆசிரிய மாணவர்களும் இன்றியமையாது வாங்கிப் பெறுவார்களாக. இதனை வாங்கும் வாயிலாக எஞ்சியுள்ளவற்றையுந் தொகுத்து வெளியிடத் துணைபுரிவார்களாக.

'தமிழன் உலா'

ஆசிரியர் இராசை கி. **அரங்கசாமி** அவர்கள். வெளியிடுவோர் திருக்குறள் பதிப்பகம், இராசிபுரம், சேலமாவட்டம். விலை ரூபா 1-00.

பண்டைக் காலத்துப் பல்பெரும் புலவர்களால் பாராளும் மன்னர்கள்மீதும் அம்மன்னர்களுக்கும் அனைத்துயிர்களுக்கும் அன்னையும் அத்தனுமாகத் திகழும். "வினையின் நீங்கி விளக்கிய அறிவின் முனைவனும்" விழுமிய முழுமுதல்வன் மீதும் பல உலாக்கள் பாடப்பட்டுள்ளன. இவ்வுலாக்களுக் கெல்லாம் ஆதியுலாவாகக் காணப்படுவது சேரமான்பெருமாள் நாயனாருளிய திருக்கைலாய ஞான வுலாவாகும் இதன்கண் காணப்படும் எழ்பருவப் பெண்களின் உள்ளுறை யுருவகம் ஆருயிர்களின் பிறப்பேழுமாகும். பெரும்பாலும் உலாக்களினுள் நாட்டு வளம், போர்ச்சிறப்பு, மன்னனின் ஆண்மை, வரையாது வழங்கும் கொடைத்திறன், எழ்பருவப் பெண்ணும் சூழ்வந்து நோக்கிக் காதல் கைம்மிக்குப் புகழ்தல் முதலியன காணலாம்.

அவற்றின் போக்கில் ஆனால் சிறந்த சீர்திருத்தத்துடன் இக் காலத்துக் கேற்றமுறையில் இந்நூலாசிரியர் பாடியுள்ளார்கள். சுவை மிக்கபாட்டு. அறமுறைகாட்டும் அளப்பருஞ் சீர்த்திமிக்கது. ஆடவர்களும் உலாவினைக் கண்டு களிக்கின்றனர். பருவப் பெண்களும் பார்த்துவக்கின்றனர். பெண்கள் பார்த்தல் பழமை போன்று காதல்நோக்கமன்று, தமிழ் மொழிவளர்ச்சி, தமிழ் நாட்டு முன்னேற்றம், திருக்குறட் பண்பாடுகள் எல்லா மக்களிடையேயும் சிறந்து பரவுதல், ஆண்மை, உழைப்பு, ஒற்றுமை முதலியனமிகுதல், தொண்டு, தொழில் முதலிய பல நலங்களும் பரவுதல் முதலிய குறிக்கோள் கொண்டதாகும். செய்யுட்கள் சிலேடை முதலிய அணிநலங்களமைந்துள்ளன. செம்பாகமான நடையுடையன. திரி சொல் மிக்குப் பயிலாதன. ஆற்றொழுக்கின. எளிதிற் பொருள் விளங்குவன. ஆசிரியரவர்கள் நன்குழைத்து நூல்யாத்துள்ளார்கள். இதனைப் பொதுவாகச் செந்தமிழன்பர்களும், சிறப்பாக ஆசிரிய மாணவர்களும் கற்றுப் பயன் எய்துவார்களாக.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர் : வ. சுப்பையா.